மலர்-3 இதழ்-60 பிப்ரவரி 16-28 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play




e- magazine

www.aanmeegamalar.com

# கோபுரம் விமானம் வேறுபாடுகள்

கோவில் அமைப்பில் விமானம் வேறு, கோபுரம் வேறு. கருவறையின் மீது கட்டப் பெறு வது விமானமாகும்.

விமானத்தில் நாகரம், வேசரம், திராவிடம் என்று மூன்று வகை உண்டு என்று சிவஞான முனிவர் காஞ்சிப் புராணத்தில் பாடியுள்ளார்

கோவில் கட்டிட அமைப்பு முறையின்படி இவை வெவ்வேறு அமைப்பு உடையன. விமானம் சதுர அமைப்புக் கொண்டிருந்தால் நாகர விமானம் என்று பெயர் உருண்டுள்ள வட்டமான விமானமாக இருந்தால் வேசர விமானம் என்று பெயர். எட்டுப் பட்டை கொண்ட விமானமாக இருந்தால் திராவிட விமானம் என்று பெயர். ஒரு நிலை (ஏகதள விமானம்), இருநிலை விமானம் (துவிதளம்), மூன்று நிலை விமானம் (திதி தளம்), ஐந்துநிலை விமானம் (பஞ்சதளம்) முதலிய பாகுபாடுகளும் உண்டு.

கோபுரம் என்பது கோவிலின் நுழைவாயிலில் உயர்த்துக் கட்டப் பெறுவதாகும்.

சோழர் காலத்தில் சிதம்பரக் கோவிலுக்குக் கோபுரம் உயர்த்துக் கட்டுவது முதன் முதலில் தொடங்கிற்று. விஜய நகரப் பேரரசு காலத்தில் தான் கோபுரங்கள் அதிகமாகக் கட்டப் பெற்றன.

கிருஷ்ண தேவராயர் காலத்தில் கோபுரம் கட்டும் பணி செல்வாக்குப் பெற்றது. அதனால் முன் பகுதியில் உயர்த்துக் கட்டப்பெறும் கோபுரத்திற்கு இராய கோபுரம் என்று பெயர் வழங்கலாயிற்று. இராசகோபுரம் என்றும் வழங் கப்பெறும்.

திருவண்ணாமலைக்கோவில், மதுரை மீனாட்சியம்மன் கோவில் முதலிய இடங்களில் நான்கு திசைகளிலும் கோபுரங்கள் கட்டப் பெற்றன. ஐந்துநிலை, ஏழுநிலை, ஒன்பதுநிலை, பதினொரு நிலை என்ற நிலையில் கோபுரங்கள் உயர்ந்தன. கோபுரங்கள் அகன்று நீள் சதுரமாக அமைந்திருக்கும். மேலே செல்லச் செல்ல அளவு குறைந்து கொண்டே சென்று உச்சியில் கலசங்கள் அமைக்கப்பட்டிருக்கும். எத்தனை நிலை உண்டோ அத்தனை கலசங்கள் உச்சியில் அமைந்திருக்கும்.

கோபுரம் உயர்த்துக் கட்டும்போது அதன் கனத்தைத் தாங்குவதற்கு ஏற்ப அடிப்பகுதியில் ஆழமாகக் குழி எடுத்து மணல் பரப்பி அதன்மேல் கட்டுவதே பண்டைய முறையாகும். அவ்வாறு கட்டப்பட்ட அடிநிலையின் மீதே தற்காலத்தில் மிக உயர்த்தி அவிநாசியிலும், திருவரங்கத்திலும் கோபுரங்கள் கட்டப் பெற்றன.

தற்காலத்தில் விமானம், கோபுரம் வேறுபாடு தெரியாமல் அனைத்தையும் கோபுரம் என்றே அழைக்கின்றனர்.

கருவறையின் மீது அமைந்திருப்பது விமானம். கோவிலின் நுழைவாயிலில் உயர்த்துக் கட்டப் பெறுவது கோபுரம். இரண்டும் வேறு வேறு தன்மையுடையன, அமைப்பிலும் மாறுபாடு உடையன ஆகும்.



www.aanmeegamalar.com







## திருக்கயிலாயம் செல்ல உதவும் நாகலிங்க 'பூ'

நாகலிங்கப் பூவை வீட்டில் சிவலிங்கமாக வைத்து பூஜிக்கலாம். ஆனால், நாகலிங்கப் பூவை ஈசனுக்கு சாற்றி, நமது பெயர் சொல்லி அர்ச்சனை செய்திருக்க வேண்டும். அதன் பிறகு, வீட்டின் பூஜை அறையில் நாகலிங்கப் பூவை சிவலிங்கமாக எண்ணி தினமும் பூஜை செய்யலாம். நமது கோரிக்கைகளை வேண்டிக் கொள்ளலாம். அர்ச்சனைக்குப் பயன்படுத்தப்பட்ட நாகலிங்கப் பூவை வீட்டில் வைத்து சிவனுக்கு இணையாக மரியாதை கொடுத்து தினமும் பூஜை செய்ய வேண்டும். வீட்டில் யாராவது வாழ்நாளின் இறுதிப்பகுதியில் இருந்தால், அவரது தலையணைக்கு அடியில் இந்த நாகலிங்கப் பூவை வைக்க வேண்டும். இதனால், அந்த ஆத்மா தமது வாழ்நாள் நிறைவடைந்ததும் திருக்கயிலாயம் சென்றடையும்.

## அலைச்சலும் குழப்பமும்

உனக்கு பிடித்திருந்தால் திடமான நம்பிக்கையை என் மீது வையுங்கள். உங்களது இப்போதைய அலைச்சலும் குழப்பமும் பயனற்றவை. நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள், சிறிதளவும் அஞ்சாதீர்.

என் மொழிகளில் நம்பிக்கை வை யுங்கள். என்னுடைய லீலைகளை நினைவில் கொள். நான் உன்னுடைய ஆசைகளைப்பூர்த்தி செய்து உன் னுடைய பக்தியை அதிகப் படுத்து வேன்.



## மாணிக்க மாலை

மலர்மாலை, சந்தனமாலை, பணமாலை கூட கேள்விபட்டிருப்போம், ஆனால் மாணிக்க மாலையை கேள்வியே பட்டிருக்கமாட்டோம். அதுதான் கீழே உள்ள படம். அதாவது மாதுளை பழம் முத்துகளால் ஆன மாலையை வைர மாலை என்று அழைப்பார்கள்.

இந்த மாலையில் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த மாதுளைமுத்துகளை ஊசியால் கோர்க்க மாட்டார்கள் நூல் வைத்து தொடுப்பார்காள் இந்த மாலை மார்கழி மாதத்தில் அத்யன உற்சவத்தில் மட்டும் சாற்றுவார்கள்.



இந்த மாலை தொடுக்க தெரிந்தவர்களால் மட்டுமே தொடுக்க முடியும் இன்று ஆழ்வார் திருநகரியில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

www.aanmeegamalar.com

# கண்ணகிக்கு தவறான தீர்ப்பு வழங்கிய பாண்டி முனிஸ்வரர் வரலாறு






அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள், மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ் புக் ஒர்க்,
அட்டைப்பட வடிவமைப்பு, நாளிதழ்கள்,
போன்றவை தரமாகவும் குறைந்த
செலவில் செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: 08825844033

கடவுளை அடைய மனிதர்களுக்கு மனம் இருந்தால் போதும், கடவுள் மீது உண் மையான அன்பைத் தவிர மற்ற எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பது இந்து மதத்தின் தாத்பர்ய கருத்து, இதை நிருபிக்கும் வகையில் மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதால்தான், பல்வேறு புராண, இதிகாசங்கள் வாயிலாக மக்களுக்கு உணர்த்தப்பட்டுள்ளது.

அன்பு இருந்தால் பக்தியில் முழுமை கிடைத்துவிடும், முழு பக்தி குடி கொண்ட மனம், மற்ற எந்தவித சஞ்சலமும் இன்றி இருக்கும். அந்த சமயத்தில் இறை சிந்தனை எளிதாக மனிதனை ஆட்கொண்டு, இறை சக்தியுடன் மனிதனை இணைத்துவிடும்.

இந்த வகையில் இறைவனிடம் உரிமை யுடன் பழக வேண்டும் என்பதை உணர்த்துவது மதுரை பாண்டி முனிஸ்வரர். சைவம், அசைவம், உண்ணாவிரதம், அன்னதானம், கறிசோறு விருந்து, போன்ற அனைத்தையும் ஏற்று, மக்களுக்கு அருள் புரிந்து வருபவர்.

சாதி, மதம், இனம் எதுவும் தடையின்றி மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் அற்புத திருத்தலம்.

“பாண்டி... நீ என்ன செய்வியோ தெரியாது. என்னோட கோரிக்கைய நீ சீக்கிரமே நிறைவேத்தித் தரணும்” என சாமிக்கே கட்ட ளையிடுவது போலத்தான் வரம் கேட்கும் பக்தர்களை இத்திருக்கோயிலில் பார்க்கலாம்.

கடவுளை, தாயாகவும் தந்தையாகவும் வழிபட்டவர் தாயுமானவர், அதே கடவு ளை காதலனாகவும், கணவனாகவும் கொண்டாடி யவர்கள் ஆண்டாள், பாமா, ருக்மணி, மீரா. இந்த வகையில் மதுரை பாண்டி முனீஸ்வரனை நெருங்கிய உறவினராக பார்க் கிறார்கள் பக்தர்கள்.

“அண்ணன் 15 நாளா கனவுல வந்து, வாடா... வந்து என்னய பாத்துட்டுப் போ’ன்னு சொல்லிச்சு. அதான் வந்தேன்’’ என பாண்டி முனீஸ்வரனை அண்ணனாகப் பார்க்கிறார் கள் பாண்டி முனிஸ்வரரின் பக்தர்கள்.

பொங்கலோ, ஆடு வெட்டுவதோ, சுருட்டு வாங்கி வைப்பதோ, பாலாபிஷேகம் செய் வதோ... எப்படி வேண்டு மானாலும் படைத்து பாண்டியை வணங்கலாம். “கடவுளின் அரு ளைப் பெற சடங்குகள் ஒரு தடையாக இருந்துவிடக் கூடாது. விரும்பிய வழியில் கடவுளின் அன்பைப் பெறலாம்‘ என்கிற உயர்ந்த தத்துவத்திற்கு உதாரணமாக இருக் கிறது பாண்டி கோவிலின் பக்தி மார்க்கம்.

மதுரை வடக்குப் பகுதியில் இருக்கும் மேலமடை பகுதியில் இருக் கிறது பாண்டி முனீஸ்வரர் கோவில். பாண்டியைப் பற்றி மதுரை மாவட்ட மக்களிடையே பல செவி வழிக் கதைகள் உண்டு. அதில் சிறுவர்களை மிரள வைக்கும் பிரசித்தி பெற்ற கதை ஒன்று உண்டு.

‘வீட்டுக்கே அடங்காத பிள்ளையாய் வளர்ந்த பாண்டி, நாளாவட்டத்தில் யாருக் கும் அடங்காத அடக்கவும் முடியாத மனித ரானார். ஆனால் அநீதியைக் கண்டால் ஆக்ரோஷத்தோடு பாய்வார். இப்படி வாழ்ந்த பாண்டி இறந்தபின் ஒரு குடும்பத்தின் குலதெய்வமாகி, இன்று தென்மாவட்ட மக்களின் இஷ்ட தெய்வமாகி இருக்கிறார். இப்போதும்கூட பாண்டி சிலையை குழந்தை கள் பார்த்தால் பயந்து போகும். முழிகளை உருட்டி, முறுக்கிய மீசையோடு சினந்து காணப்படும் பாண்டி முனி... எப்போது வேண்டு மானாலும் ஆக்ரோஷத் தோடு கிளம்பிவிடும் என்பதால், சிலையை இரும்புச் சங்கிலியால் கட்டிப் போட்டிருக்கிறார்கள்’ எனச் சொல்வார்கள். இதுபோல பல கதை கள் உண்டு.

உண்மையில் பாண்டி முனிஸ்வரர் வேறு யாருமல்ல கண்ணகிக்கு தவறான தீர்ப்பு கொடுத்த பாண்டிய மன்னன்தான் என்று தலபுராணம் கூறுகிறது.

பாண்டி கோயிலின் மூலவராக பாண்டியன் நெடுஞ்செழிய மன்னரே இங்கு குடி கொண்டிருகின்றார்.

### தல வரலாறு

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு வள்ளியம்மாள் பெரியசாமி என்ற தம்பதியர் கரூரிலிருந்து மதுரைக்கு குடி பெயர்ந்து வந்தனர். மதுரைக்கு வரும் வழியில் இருட்டிவிட்டதால், தற்போதைய மாட்டுத்தாவணிக்கு அருகேயுள்ள மேலமடையில் தங்க முடிவெடுத்து அங்கேயே உறங்கினர்.

இரவு, வள்ளியம்மாளின் கனவில் நீண்ட தாடியுடைய முனிவர் ஒருவர் வந்து, தான் மதுரையை ஆண்ட பாண்டியன் நெடுஞ் செழியன் எனவும், கண்ணகியின் கணவன் கோவலனுக்கு அநீதி இழைத்த பாவத்திற்காக மறுபிறப்பெடுத்து, பாவத்தின் நிவர்த்தியாக இதே இடத்தில் ஈசனை நோக்கி எட்டடி மண்ணுக்குள் தியானம் செய்வதாகவும், தன்னை மீட்டெடுத்து வழிபட்டால் அவர் கள் குடும்பத்தை வாழவைப்பதாகவும் கூறியுள் ளார்.

திடுக்கிட்டெழுந்த வள்ளியம்மாள் நடந்த வற்றை கணவனிடம் கூற, வண்டியூர், உத்தங்குடி, கருப்பாயூரணி கிராம மக்களோட மேலமடை மக்களும் சேர்ந்து வள்ளியம்மை கனவில் சாமி சொன்ன இடத்தைத் தோண்டியபோது, உருட்டிய விழிகள், முறுக்கிய மீசை, அடர்ந்து நீண்டு வளர்ந்த ஜடாமுடியோடு சம்பணமிட்ட தவக் கோலத்தில் சாமி சிலை கிடைத்தது. அந்த சிலையை வெளியே எடுத்து, ஒரு குடிசை போட்டு சிலையை வைத்து கும்பிடத் தொடங்கினார்கள். ஜடாமுனீஸ்வரர் கோவில் என மக்கள் மத்தியில் பிரபலமானது. வள்ளியம்மையே பூசாரியாக இருந்தார்.

அப்போது அடர்ந்த காட்டுப்பகுதியாக நடக்கக்கூட சரிவர பாதையில்லாத காலம். கம்பீரமாக இருக்கிற ஜடாமுனியைப் பார்த்து மக்கள் குறிப்பாக குழந்தைகள் அச்சப்பட்டதாம். நீண்டு வளர்ந்த ஜடாமுடியைப் பார்த்து சாமியை இரும்புச் சங்கிலியால் கட்டி வைத்திருப்பதாக மக்கள் நினைத்துக் கொண்டார்கள்.

அந்தக் காலத்திலேயே கோவில் பிரபலமாகிவிட, வெள்ளைக்கார அரசாங்கம் கோவிலுக்கு சில சட்ட திட்டங்களைப் போட்டது. இதேபோல் எல்லா கோவில்களுக்கும் சட்டங்கள் போட்டது. ஆனால் வள்ளியம்மை நீண்ட போராட்டம் நடத்தியதன் விளைவாக 1930களில் “அரசு சட்டங்களிலிருந்து விலக்கு அளிக்கப்பட்ட கோவில்’’ என்ற பெருமையைப் பெற்றது.



அதன்பின், பாண்டி முனீசுவரருக்கு ஒரு கோயிலையும் எழுப்பப்பட்டு, வள்ளியம்மாளின் சமூகமே இக்கோயிலை இன்று வரை பூசை செய்தும், பராமரித்தும் வருகின்றனர்.

### பாண்டி முனீசுவரரின் அமைப்பு

உலகின் பிற காவல் தெய்வங்களைப் போல் அல்லாமல், பத்மாசனமிட்டு யோக நிலையில் சிவபெருமானை தியானித்த நிலையில் கிழக்கு நோக்கி அமர்ந்துள்ளார்.

### சமய கருப்பு

இக்கோயிலின் உபதெய்வமாக பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் குலதெய்வமான சமய கருப்பசாமியை வழிபடுகின்றனர். ஒரு முறை, வேட்டைக்குச் சென்ற ஆங்கிலேயர் (கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர் கருப்பசாமி மீது நம்பிக்கையின்றி) இக்கோயிலில் உள்ள சமய கருப்பசாமியிடம் வந்து, தான் இன்றைக்கு எத்தனை மிருகங்களை வேட்டையாடப் போகின்றேன் என குறி கேட்டுள்ளார்.

அதற்கு சமய கருப்பசாமியிடமிருந்து எந்த ஒரு பதிலும் வரவில்லையாம். அதேபோல், அந்த ஆங்கிலேயரும் அன்று ஒரு மிருகத் தைக்கூட வேட்டையாட முடியவில்லை.

கருப்பசாமியின் கூற்று உண்மையானதால், கோபத்தில், சாமியின் கரம் மற்றும் சிரத்தை துண்டித்தார். பின்னர் தனது இருப்பிடத்திற்குச் சென்று கொண்டிருந்த அந்த ஆங்கிலேயர், கிராம எல்லையைத் தாண்டும் முன்பே அவரும் அவரது குதிரையும் கல்லாயினர்.

இதன் காரணமாகவே சமய கருப்பசாமி இன்று வரை கரம் மற்றும் சிரமின்றி காணப் படுகின்றார். (நம்மை ஆண்ட வெள்ளைக்கார கிறிஸ்தவனின் செயலை மக்கள் மறக்கக் கூடாது என்பதால்) கருப்பசாமி கோலம் ஒரு சான்று.

### உப தெய்வங்கள்

இக்கோயிலில், பாண்டி முனீசுவரர் மூல கடவுளாக வழிபடப்படுகிறார். மேலும் விநாயகர், சமய கருப்பசாமி, (பாண்டிய மன்னர்களின் குலதெய்வம்) ஆண்டிச்சாமி, சுப்பிரமணியர் ஆகியோர் உப கடவுள்களாக அமைந்துள்ளனர்.

### வழிபாடு

கோயிலுக்கு வருபவர்கள், முதலில் விநாயகரை வழிபட்டு பின்னர் பாண்டி முனீசுவரரை வழிபடுகின்றனர். இங்குள்ள பாண்டி முனீசுவரர் புலால் உண்ணாதவர். ஆகையால், அவருக்கு வெண்ணாடை சார்த்தி, பால், மணமிகு தைலம், சந்தனம், சவ்வாது, சர்க்கரையில்லா பொங்கல், பழங்கள் மற்றும் தேங்காய் போன்றவைகளைக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். மேலும் இங்குள்ள சமய கருப்பசாமிக்கு, ஆடு மற்றும் கோழிகளை பலியிட்டும் சாராயம், சுருட்டு போன்றவைகளை படைத்தும் வழிபடுகின்றனர்.

# ‘காலனைக் காலால் உதைத்தேன்’ மூச்சுப் பயிற்சி பற்றி சித்தர்கள் கருத்து

கபாலத்தில் சளிக்குற்றமும், அடிவயிற்றில் மலக்குற்றமும் இல்லாமல் இருக்க காலையில் திரிகடுகும், மாலையில் திரிபாலாவும் தினமும் எடுத்துக்கொள்ளலாம்.

“ இரைப்பை சுருக்கியும் நுரைப்பை விரிந்தும் இருப்பதே நீண்ட ஆயுள்”

‘சூரியன் பார்க்க எழாமலும் சூரியனைப் பார்க்க எழுவதுமே நலம்’ மூச்சுப் பயிற்சி மூலம் சுவாசத்தை குறைக்க பழகிக் கொண்டால் ஆயுள் கூடும்.

நமது இடது நாசி சந்திரகலை. அதில் வரும் காற்று குளிர்ச்சியாக இருக்கும்.

வலது நாசி சூரியகலை. அதில் வரும் காற்று உஷ்ணமாக இருக்கும்.

இரண்டு நாசிகளிலும் மூச்சுக் காற்று வந்தால் சுழிமுனை என்பர்.

பொதுவாக மழைக் காலங்களில் இயற்கையாகவே சூரியகலையில் ஓடும்.

அதிக வெயில் அடிக்கும் போது சந்திரகலையில் ஓடும்.

இது இயற்கையாகவே நடக்கும் அற்புதமாகும்.

ஏனெனில் உடலில் சூடும் குளிர்ச்சியும் சமநிலையில் இருக்க வேண்டும்.

இதில்எந்த குறைபாடு நேர்ந்தாலும் நமது உடலில் பல உபாதைகள் ஏற்படும்.

ஒருவருக்கு சூரியகலையில் சுவாசம் தொடர்ந்து மூன்று நாட்கள் ஓடினால் ஒரு வருடத்தில் மரணம் சம்பவிக்கும்.

ஒரே நாசியில் பத்து நாட்கள் தொடர்ந்து ஓடினால் மூன்று மாதங்களில் மரணம் சம்பவிக்கும். மூச்சுப்பயிற்சி மூலம் சுவாசத்தை குறைக்க பழகிக் கொண்டால் ஆயுள் கூடும்.

சுவாசம் அதிகரிக்க அதிகரிக்க ஆயுள் குறையும். சுவாசத்தை அடக்குவதால் ஆமைகளும் பாம்புகளும் அதிக நாட்கள் உயிருடன் வாழ்கின்றன.

நாம் நடக்கும் போது 16 அங்குலமும், அமர்ந்திருக்கும் போது 12 அங்குலமும், ஓடும் போது 25 அங்குலமும், உறங்கும் போது 36 அங்குலமும், உடல்உறவு கொள்ளும் போது 64 அங்குலமும் சுவாசம் நடைபெறுகிறது.

**சுவாசம்...**

11 அங்குலமாக குறைந்தால் உலக இச்சை நீங்கும்.

10 அங்குலமாக குறைந்தால் ஞானம் உண்டாகும்.

9 அங்குலமாக குறைந்தால் விவேகி ஆவான்.

8 அங்குலமாக குறைந்தால் தூர திருஷ்டி காண்பான்.

7 அங்குலமாக குறைந்தால் ஆறு சாஸ்திரங்கள் அறிவான்.

6 அங்குலமாக குறைந்தால் ஆகாய நிலை அறிவான்.

5 அங்குலமாக குறைந்தால் காய சித்து உண்டாகும்.

4 அங்குலமாக குறைந்தால் அட்டமா சித்து உண்டாகும்.

3 அங்குலமாக குறைந்தால் நவ கண்ட சஞ்சாரம் உண்டாகும்.

2 அங்குலமாக குறைந்தால் கூடுவிட்டு கூடுபாய்தல் சித்திக்கும்.

1 அங்குலமாக குறைந்தால் ஆன்ம தரிசனம், உதித்த இடத்தில் நிலைத்தல், சமாதி நிலை அன்னபாணம் நீங்கும்.

## சந்திரகலை என்றால் என்ன?

இடது நாசிச்(இடது பக்க மூக்கு) சுவாசம் சந்திரகலை எனவும், வலது நாசிச் (வலது பக்க மூக்கு) சுவாசம் சூரியகலைஎனவும் அழைக்கப்படும்.

சந்திரகலையை மதி/ இடகலை/ இடைக்கால் எனவும்,

சூரியகலையை பிங்கலை/பின்கலை/வலக்கால் எனவும் அழைக்கப்படுவதுண்டு.

இங்கு ‘கால்’ என்பது மூச்சைக் குறித்து நிற்கின்றது. அதனால் தான் ‘காலனைக் காலால் உதைத்தேன்’ எனச் சித்தர்களும் ஞானியரும் கூறுவதுண்டு.

இங்கு காலனாகிய இறப்பை, காலாகிய மூச்சுக்காற்றைச் சுழிமுனையில் ஒடுங்கச் செய்வதன் மூலம் பிறவிப்பிணி நீங்கி ஒளியுடம்பு பெற்று மரணமில்லாப் பெரு வாழ்வு/சாகாக்கலை அடைதலைக் குறிக்கும்.



‘விதியை மதியால் வெல்லலாம்’ என்பார்கள்.

இங்கு மதி என்று கூறப்படுவது புத்தி அல்ல. மதி என்றால் சந்திரன்.

16 அங்குலம் ஓடக்கூடிய சந்திரகலையை சுருக்க சுருக்க ஆயுள் விருத்தியாகும். எனவே விதி முடிவும் விலகியே போகும்.

ஒரு நிமிடத்திற்கு 15 மூச்சு; மூச்சை உள்ளே இழுப்பது ஒரு பங்கு, நேரம்.

உள்ளே அதை தங்கவைப்பது 4 பங்கு நேரம். மூச்சை வெளியே விடுவது 2 பங்கு நேரம். இதுதான் பிராணாயாமத்தின்சாராம்சம்.

நமது நுரையீரலில் வலது, இடது என இரு பகுதிகள்.

வலது நுரையீரலில் 3 பகுதிகள், இடது நுரையீரலில் 2 பகுதிகள். நுரையீரல் ‘ஸ்பாஞ்’ போல காற்றுப் பைகளால் ஆனது.

வலதுபக்கம் சாய்ந்து படுக்கும்போது, வலது நுரையீரலில் உள்ள 3 பகுதிகளும் அழுத்தப்பட்டு இடது நாசி வழியாக மூச்சுக்காற்று ஒரே சீராக உள்ளிழுக்கப்பட்டு உடல் முழுக்க ‘பிராணா’ சக்தி சீராகப் பரவுகிறது .

இடது நாசி வழியாக ஓடும் மூச்சு, ‘சந்திரகலை’. இது குளுமையானது.

வலது நாசி வழியாக ஓடும் மூச்சு, ‘சூரியகலை’. இது வெப்பமானது.

வலதுபக்கம் சாய்ந்து படுக்கும்போது குளுமையான ‘சந்திரகலை’ அதிகரிக்கும்.

இது மன படபடப்பைக் குறைத்து தூக்கத்தையும் வரவழைக்கும்.

“ஆரோக்கிய வாழ்வுக்கு மூச்சுப்பயிற்சி அவசியம்”

– சுப்பையா பகவதியப்பன்
bhagavathiappansubbian@gmail.com


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# நெய்யும் மெய்யும்

பெரும்பாலான மக்கள், நெய் வெறும் கொழுப்பு மட்டும் நிறைந்த, ரத்தக் கொழுப்பை உயர்த்தும் குணம் உடையது என்ற தவறான எண்ணத்துடன், உணவில் நெய்யை அறவே சேர்ப்பது இல்லை.

ஆனால் ஆயுர்வேதத்தில், நெய்யினை உணவில் தினந்தோறும் எடுத்துக் கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. நெய் ஒரு மிகச் சிறந்த போஷாக்கான, மருத்துவ குணம் வாய்ந்த பொருள். வாயு மற்றும் பித்த சம்பந்தமான நோய்களுக்கு, நெய் மிக முக்கியமான மருந்து. நெய்யை ஏன் நீங்கள் கட்டாயம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என தெரியுமா?

- நெய் எளிதில் ஜீரணமாகி விடும். சாப்பிட்டவுடன் அவை கொழுப்பாக உடலில் தங்கப்படுவதில்லை. மாறாக எனர்ஜியாக எரிக்கப்படுவதால் உடலில் கொலஸ்ட்ரால் அதிகரிக்காது.
- மாலைக்கண் மற்றும் கிட்டப் பார்வை, தூரப்பார்வை என பார்வை குறைபாடு இருப்பவர்கள் கட்டாயம் நெய்யை சேர்த்துக் கொள்வதால் கண் பார்வை தெளிவடையும்.
- பால், தயிர் போன்றவற்றில் ஒவ்வாமை இருப்பவர்கள் தாரளமாக நெய் சேர்த்துக் கொள்ளலாம். அவற்றிலுள்ல லாக்டோஸ் இல்லையே தவிர அவற்றின் பண்புகள் ஒத்திருக்கும்.
- நெய்யில் நிறைய நேர்மறையான குணங்கள் இருப்பதால் அதனை சாப்பிடுவதால் நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும் என ஆயுர்வேதம் கூறுகின்றது.
- மருந்துக்கள் கெடாமல் பாதுகாக்க நெய்யே சிறந்த பொருளாகும். நெய்யை ரசாயனம் என்று ஆயுர்வேத மருந்தாளர்களால் அழைக்கப்படுகிறது. ஏன் என்றால் முழு உடல் நலம் கொடுத்து நீண்ட ஆரோக்கியத்தைக் கொடுக்கும் குணம் நெய்க்கு உண்டு. அவை மருந்துக்களின் குணங்களை செல்களின் சுவருக்குள் ஊடுருவச் செய்கிறது.
- மலச்சிக்கலைப் போக்கும். வாத, பித்த, கபத்தின் சீற்றங்களைக் குறைத்து அதனதன் நிலையில் நிறுத்தி நோய்களின் தாக்கத்தைத் தடுக்கும்.
- சிலர் எப்போதும் சோர்வுடன் உடல் வலுவில்லாமல் காணப்படுவார்கள். சிறிது தூரம் நடந்தால்கூட அவர்களுக்கு மேல் மூச்சு வாங்கும். உடனே அமர்ந்து விடுவார்கள். கால்கள் அதிகமாக வலிப்பதாகக் கூறுவார்கள். இதற்கு காரணம் உடலில் சத்தின்மையே. இவர்கள் தினமும் மதிய உணவில் நெய்யை சேர்த்து வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.
- நெய் சாப்பிட்டா நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்கும் !

மேற்கண்ட அனைத்தும் உண்மையான தரமான கலப்படமில்லாத நெய் மூலம் கிடைக்கும்.







## பெள்ளாதி சிவன் கோயிலில் சனிப்பிரதோஷவழிபாடு





காரமடை அருகேயுள்ள பெள்ளாதி எனும் ஊரின் உண்மையான பெயர் வெள்ளாதி. பேச்சுவழக்கில் மருவி பெள்ளாதி ஆகிவிட்டது. அப்பகுதியில், விஜயநகரப் பேரரசு காலத்தில் 15ம் நுற்றாண்டில் குடிபுகுந்த கன்னட மக்கள் அதிகப்படியாக உள்ளனர்.

அங்குள்ள கோட்டை மாரியம்மன் கோவிலில் உடைந்த நிலையில் புலிக்குட்டி கல் ஒன்று உள்ளது. அதன்முன் மண்டபம் இருந்ததற்கான அடையாளமாக, தூண்கள் வரிசையாக நட்டுவைக்கப்பட்டுள்ளன. அங்கு கோட்டை இருந்ததாகவும், திப்பு சுல்தான் காலத்தில் படையெடுப்பில் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடத்தில் 1538–ல் கிருஷ்ணதேவராயர் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோவிலும் உள்ளது. அங்குள்ள கல்வெட்டில், மல்லன் எனும் பிராமணன் கோவிலில் திருநந்தா விளக்கு எரிக்க, 40 பணம் தந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

வேதநாயகி அம்பாள் சமேத சங்கமேஸ்வரர் என்ற திருநாமத்துடன் திகழும் சிவன்கோயில் 100 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. இக்கோயிலில் 2.2.2019 அன்று சனிப்பிரதோஷ வழிபாடு சிறப்புடன் நடைபெற்றது.

நந்தியெம்பெருமானுக்கும், எம்பெருமான் சங்கமேஸ்வரருக்கும்,வேதநாயகி அம்பாளுக்கும் மஞ்சள், பால், இளநீர்,தயிர் உள்ளிட்ட 16 வகையான பொருள்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. அபிஷேக பூஜை முடிந்து சிறப்பு அலங்கார பூஜைகள் முடிந்த பின்னர் தீபாராதனை நடைபெற்றது.



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# இத்தனை கடவுள் ஏன்?

கடவுள் ஒருவனே, என்கிறது பிற மதங்கள். ஆனால், இந்து மதத்தில் மட்டும் எதற்கு இத்தனை கடவுள்கள், என்கிற கேள்வி நம் எல்லோர் மனத்திலும் நிகழும். மும் மூர்த்திகள் என்று கருதப்படுபவர்கள் கூட, ஒரு யோக நிலையில் இருப்பது போல நாம் எத்தனை படங்களில் பார்த்து இருக்கிறோம். அவர் யாரை எண்ணி தவம் செய்கிறார். மும் மூர்த்திகளுடன். சதாசிவம், ருத்ரன், என்று ஐந்து மூர்த்திகள் இருக்கின்றனராம்.

உலக பரம்பொருள் என்று சர்வ வல்லமை பொருந்திய அந்த கடவுள் ஒன்று தான். அவரைத்தான் சிவனும், யோக நிலையில் தியானிக்கிறான். அந்த ஆதி சிவன் ஒரு வனே. மீதி நாம் வணங்கும் அனைவரும், தேவதைகள், தெய்வங்கள் அவதாரங்கள், ஒரு சில காரண, காரியத்துக்காக அந்த பரம்பொருள் அனுப்பியவர்கள் என்கின்றனர் பெரியோர்கள். சித்தர்களுக்கு மேல் இருக்கும் உயர்ந்த நிலை, இந்த தெய்வங்கள்.

முருகனும், விநாயகரும் கூட சித்தர்கள் போன்று வாழ்க்கை நடத்தி, பின் சிவனின் மைந்தனானவர்கள் என்கின்றனர். பலப்பல யுகங்கள் கடந்து, நாமும் இறைநிலை அடைய விருக்கிறோம். அதை இன்றிலிருந்தே தொடங்குவது, நமக்கு இன்னும் நல்லது.

எப்படி இறைவனுக்கும் சில கடமைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றனவோ, அதே போல மனிதர்களுக்கும் சில கடமைகள் விதிக்கப் பட்டுள்ளன.

ஒரு பெரிய தொழிற்சாலை இருப்பதாக எடுத்துக்கொள்வோம். நாமெல்லாம் தொழி லாளர்கள். நம்மை சூப்பர்வைஸ் செய்ய நவ கிரகங்கள். நவ கிரகங்கள் பக்காவாக நம்மை கண்காணித்து, நம்மை வேலை வாங்குகின்றன. பஞ்ச பூதங் களை ரா மெட்டீரியலாக கொண்டு, பஞ்சபூத கலவையாலான அந்த உடலைக் கொண்டு இந்த பிரபஞ்ச தொழிற்சாலை இயங்குகிறது.

இந்த சூபர்வைசர்களுக்கு மேலே மேலாளர்கள். அவர்களுக்கும் மேலே பொது மேலாளர்கள். அவர்களையும் இயக்குவது இயக்குனர்கள். அந்த இயக்குனர்களுக்கும் மேலே சேர்மன் என்கிற முதலாளி.

செய்யும் வேலை, திறமை, அவர்கள் செய்து முடிக்கும் திறன், என்று ஒவ்வொருவரின் உழைப் பும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுகிறது. உழைக்க வேண்டும். அதாவது, வாழ வேண்டும் வாழ்ந்து அவரவர் கடமையை செய்ய வேண்டும். இப்படியே, ஒவ்வொருவருக்கும் அடுத்தடுத்த நிலை தீர்மானிக்கப் படுகிறது. ஒரு செக்சனிலிருந்து, மற்றொரு பிரிவுக்கு அவர் மாற்றப்படுவர். நல்ல திறமையுடன், நல்லவராக இருந்தவருக்கு அடுத்த பிரிவு, கொஞ்சம் மேன்மையானது.

இந்த அப்ரைசல் தான் மரணம், அடுத்த பிறவி. நீங்கள் திரும்ப உழைப்பதற்கு வசதியாக, திரும்ப இளமை கிடைக்கிறது. மோசமான வேலை செய்தவர்களுக்கு கடினமான செக்ஷனும் கிடைக்கும்.

நீங்கள் மட்டும், தனித்தனியே வேலை செய்ய முடியாததால் உங்களுடன் இணைந்து செயலாற்ற உங்கள் குடும்பம், நண்பர்கள், சமுதாயம் என்று ஒரு குழுவே இருக்கிறது.

குடும்பத்தில் யாரோ ஒருவர், ஓவராக ஆட்டம் போட்டாலும், திடு திப் பென்று (அகால மரணம்) டிபார்ட்மென்ட் மாற்றமும் நிகழும். இதனால், அவரும் பாதிக்கப் படுகிறார். அந்த குடும்பமும் வேலைப் பளுவால் முழி பிதுங்கும்.

இவை அத்தனையும் சமாளித்து, நரை மூப்பெய்தி என்னை கூட்டிக்கோப்பா என்று, நீங்கள் எழுப்பும் ஒரு மன ஓலம், உங்களுக்கு அடுத்த கதவை திறக்க வைக்கும்.

நீங்கள் கதவு திறந்து, அடுத்த அறைக்கு வந்ததும், அதே சூப்பர்வைசர்கள். அவர்களுக்கு தெரியும், நம்மோட அருகதை. இதில், பாரபட்சம் பார்க்காது நமக்கு கிடைக்க வேண்டிய கூலியை, அவர்கள் மேலிடத்திலிருந்து நமக்கு கிடைக்க செய்கின்றனர்.

ஒரு ப்ரோமோஷன் கொடுக்கும் முன், உங்கள் சகல திறமையும் பரிசோதிப்பது போல உங்களுக்கு பலப்பல கஷ்டங்கள், சோதனைகள் வைக்கப்படுகின்றன. இதிலும் தாக்குப் பிடித்து, உங்கள் அணியிலுள்ள சக தொழிலாளர்களையும் அரவணைத்து, உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்து முடிக்க வேண்டும்.

உங்கள் அணியிலும், சமூகத்திலும், ஒருவர் மனம் கூட கோணாது, அவர்களுக்கும் ஒத்தாசை செய்து, ஒரு குழுவாக கூடி உங்கள் கடமையை செய்து முடிக்கவேண்டும். அவர்களை பகைத்துக் கொண்டால், சமயத்தில் சொதப்பிவிடுவார்களே.

உங்களை நீங்கள், உங்கள் ஆன்ம ஒளியை உணர்ந்து கொள்ளுதல் தான் முதல் படி. உங்கள் பலம் என்ன வென்று அதன் பிறகுதானே உணர முடியும்? ஹனுமனை போல நீங்களும் கடலை தாண்ட முடியும். மலையையும் தூக்க முடியும்.

உலகம் ஒரு நாடக மேடைதான். அந்த இறைவன் இயக்குகிறான். திறமையாக, நடித்தால் நீங்களும் ஒரு நாள் ஹீரோ வைக்கலாம். இல்லையெனில், சாதாரண துணை நடிகர் தான். ஒரு நாடகம் முடிந்ததும், அடுத்த நாடகம் ஆரம்பிக்கும். அப்போது ஹீரோவும், இரண்டாம் நிலைக்கு தள்ளப்படலாம், தனது பொறுப்பை உணர்ந்து ஜொலிக்காவிடில்... நமது பிறப்பின் நோக்கம் என்ன, நாம் எந்த இலக்கை நோக்கிப் பயணிக்கிறோம் என்பது மிக முக்கியம்.

இப்போது நாம் எங்கு இருக்கிறோம்? நமக்கு ஏன் இத்தனை தெய்வங்கள் என்று புரிகிறதா? எப்படி சூரியனிலிருந்து தெறித்து வந்த, உஷ்ணத் துளிதான் பூமி என்று விஞ்ஞானம் நிரூபித்ததோ, அதைப் போல ஏராளமான சூரியன்களும் இருப்பது உண்மையோ, அந்த பிரபஞ்சத்திற்கும் மூலப் பொருள் ஒன்று

இருக்கும். அந்த மூலத்திலிருந்து வெளியான, துகள்களின், அணுக்களில், அணுக்களில் உள்ள அணுதான், நாம் அனைவரும்.

என்னில் உள்ள அந்த ஜீவ ஒளி தான், உங்களிலும் உள்ளது. நம் அனைத்து உயிர்களிலும் உள்ளது. இயற்கையிலும் உள்ளது.

எனவே, ஜாதி மத. இன துவேஷத்தை மறப்போம். சக மனிதர்களை நேசிப்போம். இயற்கையை ஆராதிப்போம். நம் வாழ்வாதாரத்தை வணங்குவோம். குழந்தைகளையும், திறமை இல்லாதவர்களையும், வழி நடத்துவோம். நாம் அனைவரும் கடவுளாவோம். அடி மனத்தில் பரவும் எண்ணம், எத்தனை ஜென்மங்கள் எடுத்தாலும் மறையாது. முதலில் நம் மனம் முழுவதும் நல் எண்ணங்களால் நிறையட்டும்.

பிற உயிர்களுக்கு தீங்கு விளைவிக்க வேண்டாம். பிற உயிர்களை கொன்று புசிக்க வேண்டாம். நடந்தவை மறப்போம். இனியும் மன தறிந்து எந்த பாவமும் செய்யாமல், நிம்மதியாக வாழ்வோம்.

தோல்விகளை கண்டு துவளாத மனமும், வெற்றிகளைக் கண்டு மமதை கொள்ளாத மனப் பக்குவமும், கஷ்டங்களை தாங்கி கொள்ளும் மனப் பக்குவமும், வெற்றிப் பாதையை நமக்கு அடையாளம் காட்டும் அந்த பரம்பொருளின் ஆசியும் நம் அனைவருக்கும் கிடைக்கட்டும்!

கீழே, சில காரண காரியங்களுக்கு எந்த தெய்வங்களை வணங்கினால், உங்கள் குறை தீரும் என்று, நம் முன்னோர்கள் சித்தர் பெருமக்கள் கூறியவற்றை கொடுத்துள்ளேன்.. உரிய டிபார்ட்மென்ட் மேனஜர், சூப்பர்வைசர் தானே உடனடியாக தீர்வு கொடுக்க இயலும். முயன்று பாருங்கள்...

காரியம் நடக்க விக்னங்கள், இடையூறுகள் நீங்க விநாயகர்

செல்வம் சேரஸ்ரீ மகாலட்சுமி, ஸ்ரீ நாராயணர்

நோய் தீர ஸ்ரீ தன்வந்தரி, தட்சிணா மூர்த்தி

வீடும், நிலமும் பெற ஸ்ரீ சுப்ரமண்யர், செவ்வாய் பகவான்

ஆயுள், ஆரோக்கியம் பெற ருத்திரன்

மனவலிமை, உடல் வலிமை பெற ராஜராஜேஸ்வரி, ஸ்ரீ ஆஞ்சநேயர்

கல்வியில் சிறந்து விளங்க ஸ்ரீ சரஸ்வதி

திருமணம் நடைபெற ஸ்ரீகாமாட்சி அம்மன், துர்க்கை

மாங்கல்யம் நிலைக்க மங்கள கௌரி

புத்திர பாக்கியம் பெற சந்தான கிருஷ்ணன், சந்தான லட்சுமி

தொழில் சிறந்து லாபம் பெற திருப்பதி வெங்கிடாசலபதி

புதிய தொழில் துவங்க ஸ்ரீகஜலட்சுமி

விவசாயம் தழைக்க ஸ்ரீ தான்யலட்சுமி

உணவுக் கஷ்டம் நீங்க ஸ்ரீ அன்னபூரணி

வழக்குகளில் வெற்றி பெற விநாயகர்

சனி தோஷம் நீங்க ஸ்ரீ ஐய்யப்பன், ஸ்ரீ ஆஞ்சநேயர்

பகைவர் தொல்லை நீங்க செந்தூர் முருகன்

பில்லி, சூன்யம், செய்வினை அகல ஸ்ரீவீரமாகாளி, ஸ்ரீ நரசிம்மர்

அழியாச் செல்வம், ஞானம், சக்தி பெற சிவஸ்துதி

நோய் தீரமுடி நரைத்தல், உதிர்தல் மகா லட்சுமி, வள்ளி

கண் பார்வைக் கோளாறுகள் சிவபிரான், சுப்ரமண்யர், விநாயகர்

காது, மூக்கு, தொண்டை நோய்கள் முருகன்

ஆஸ்துமா, சளி, காசம், சுவாசக் கோளாறுகள் மகாவிஷ்ணு

மாரடைப்பு, இருதய கோளாறுகள் சக்தி, கருமாரி, துர்க்கை

அஜீரணம், குடல்வால், அல்சர், மூலம், மலச்சிக்கல், மஞ்சள் காமாலை, காலரா தட்சிணாமூர்த்தி,

நீரிழிவு, சிறுநீரகக் கோளாறு முருகன்

பால்வினை நோய்கள், பெண்களுக்கான மாதவிடாய் கோளாறுகள் ராஜராஜேஸ்வரி, ஸ்ரீ ரங்கநாதர், வள்ளி

மூட்டுவலி, கால் வியாதிகள் சக்கரத் தாழ்வார்

வாதங்கள் சனிபகவான், சிவபெருமான்

பித்தம் முருகன்

வாயுக் கோளாறுகள் ஆஞ்சநேயர்

எலும்பு வியாதிகள் சிவபெருமான், முருகன்

ரத்தசோகை, ரத்த அழுத்தம் முருகன், செவ்வாய் பகவான்

குஷ்டம், சொறி சிரங்கு சங்கர நாராயணன்

அம்மை நோய்கள் மாரியம்மன்

தலைவலி, ஜீரம் பிள்ளையார்

புற்று நோய் சிவபெருமான்

ஞாபகசக்தி குறைவு விஷ்ணு

மு.கிருஷ்ண மோகன்
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
போன்: 8526223399

ஆன்மிகமலர் மெயில் புக்





# ஸந்த்யா வந்தனம்

❖ ஜகத்குரு மகா பெரியவாள்

ஸந்த்யா வந்தனம் பற்றி ஒரு கதை இருக்கிறது. இக்கதை சுமார் 500, 600 வருஷங்களுக்கு முன் நடந்ததாக ஊகிக்க முடிகிறது. சென்னையை சேர்ந்த ஆர்க்கியலாஜிகல் துறை பிரசுரித் திருக்கும் பதிவுகள்..

இந்தக் கதைக்கு ஆதாரங்கள் இருக்கின்றன.

திருவனந்தபுரத்தை ஆண்ட ராஜாக்களில் ஒருவர், எள்ளினால் ஒரு காலபுருஷன் உருவத்தைச் செய்து, அதனுள் ஏராளமான ஐவர்யத்தை வைத்து, தானம்செய்யப் போவதாக விளம்பரம் செய்தார்.

அந்த உருவத்திற்குள் இருக்கும் பொருளைக் கருதி, அநேகம்பேர் தானம் வாங்குவதற்காக வந்தார்கள். அந்தகாலபுருஷன் உருவம் கேட்ட கேள்விகளுக்குத் தக்கபதில் சொல்ல முடியாமல், தானம் வாங்கவந்தவர்களெல்லாம் மரண முற்றார்கள்.

கன்னடியர் என்ற ஒரு பிராம்மணர் இருந்தார். ஸந்த்யா வந்தனகர்மாவில் வெகு ச்ரத்தை உள்ளவர். சாஸ்திரங்கள் முதலானவற்றில் அவருக்கு அப்யாஸம் கிடையாது. அந்தத் தானத்தை வாங்க அவர் வந்தார்.

அப்போது அந்த காலபுருஷனின் உருவம் மூன்று விரல்களைக் காட்டியது. முடியாது என்றார்.

பிறகு இரண்டு விரல்களைக் காட்டியது. அதற்கும் முடியாது என்றார்.

கடைசியாக ஒரு விரலைக் காட்டியது, சரி என்றார்.

தான் ஒன்றும் செய்ய முடியாததைக் கண்டு, கால புருஷன் அந்த உருவத்தினின்றும் மறைந்தான். அந்தத் தானத்தில் அடங்கிய சகல ஐசுவர்யங்களையும் அந்தப் பிராமணர் வாங்கிக் கொண்டார்.

மூன்றுவிரல்கள், மூன்று வேளைகளில் செய்யப்படும் ஸந்த்யா வந்தனத்தின் பலன். இரண்டு விரல்கள், காலை மாலை இருவேளைகளின் ஸந்த்யா வந்தனபலன். ஒருவிரல், ஒருவேளை, அதாவது மாத்யாந்நிகத்தின் பலன் என்பது காலபுருஷன் உருவம் கேட்ட கேள்விகளின் அர்த்தம்.

ஸந்த்யா வந்தனத்தின் ஒருவேளையின் பலனைக்கொடுத்ததன் மூலமும், ஐசுவர்யத்தைத் தானம் வாங்கியதன் மூலமும் பிராம்மணருக்குப் பாபம்சம்பவித்துவிட்டது.

அந்தப் பாபத்தைப் போக்கிக்கொள்ள வேண்டிய வழியைத் தெரிந்து கொள்ள அகத்திய முனிவர் தவம் செய்துகொண்டிருப்பதாகச் சொல்லப்படும் மலைச்சாரலுக்குச் சென்றார். போகும் முன், தம்மிடமிருந்த தனத்தைப் பாதுகாக்கும்படி, கோவில்பூஜை செய்து வந்த ஒரு குருக்களிடம் ஒப்படைத்தார். எங்கே சென்றாலும் அகத்திய முனிவர் காணப்படவில்லை.

முனிவரைக் காணாமையால், அவர் ஏக்க முற்றிருக்கும் சமயத்தில், அகத்திய முனிவர் ஓர் கிழ வடிவத்துடன் பிராம்மணர் முன் தோன்றினார். அவரிடத்தில், பிராமணர் நடந்தவற்றைச் சொன்னார்.

அந்தக் கிழவர், நீ போகின்ற வழியில் ஒரு பசுமாடு உமக்குத் தென்படும்.

அந்த இடத்திலிருந்து நீ ஒரு கால்வாய் வெட்ட ஆரம்பிக்க வேண்டும். பசுமாடு எவ்வளவு தூரம் சென்று நிற்கின்றதோ அவ்வளவுதூரத்திற்குக் கால் வாய் வெட்ட வேண்டும்.

நடுவில் பசுமாடு எந்த இடங்களில் சாணி போட்டு மூத்திரம் பெய்கிறதோ அந்த அந்த இடங்களில், சாணிபோட்ட இடத்தில் மடை அமைக்கவும், மூத்திரம் பெய்யும் இடத்தில் வாய்க்கால் வெட்ட வேண்டும். இவ்விதம் செய்தால் உமக்கு ஏற்பட்டிருக்கும் பாபம் போய்விடும் என்று கிழவர் சொன்னார்.

கன்னடியர் அவ்விதமே செய்யத் தீர்மானித்துக் கொண்டு, திரவியத்தைத் திரும்ப வாங்குவதற்காக குருக்களிடம் சென்றார்.

குருக்களுக்குப் பிராமணர் கொடுத்த தனத்தின் மீது மோகம் ஏற்பட்டுவிட்டது. அந் தக் காலத்து பவுன் இளம்துவரம் பருப்பை ஒத்திருக்குமாதலால், குருக்கள் பிராமணரிடம் துவரம் பருப்புகளைக் கொடுத்து, "நீர்கொடுத்த திரவியம் இதுதான், எடுத்துக் கொள்ளும்" என்றார்.





குருக்களின் வஞ்சகச் செயலை அறிந்து கொண்ட பிராமணர், "நான் கொடுத்தது இது வல்ல, நான் கொடுத்ததைக் கொடுங்கள்" என்றுமிகவும் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்.

எந்தப்பயனும் ஏற்படவில்லை. ஆகவே,

ராஜாவிடம்சென்றுமுறையிட்டுக் கொண்டார். குருக்களும் தருவிக்கப்பட்டார்.

ஆனால் குருக்கள் குற்றத்தை ஒப்புக் கொள்ளவில்லை.

ஆகவே குருக்கள்பூஜை செய்யும் லிங்கத்தைக் கட்டிக் கொண்டு பிரமாணம் செய்தால் நான் ஒப்புக்கொள்கிறேன் என்று பிராமணர் கூறினார்.

அவ்விதம் செய்வதாகக் குருக்களும் சம்மதித்துவிட்டார்.

குருக்கள் ஆபிசாரப் பிரயோகத்தில் தேர்ந்தவரானதால், லிங்கத்திலுள்ள ஸ்வாமியைப் பக்கத்திலுள்ள ஒருமரத்தில் ஆகர்ஷனம் செய்துவிட்டார்.

இதை இறைவன், பிராமணரின் கனவில் தோன்றி, நடந்ததைச் சொல்லிவிட்டார். பிராமணர் மறுபடியும் ராஜாவிடம் சென்று "குருக்கள் மரத்தைக் கட்டிக்கொண்டு பிரமாணர் செய்யும்படிச் செய்ய வேணுமாகக் கேட்டுக்கொண்டார்".

குருக்கள் மறுப்பளித்தார்.

ராஜாவிடவில்லை. மரத்தைக் கட்டிக் கொண்டு பிரமாணம் செய்யுமாறு ஆணையிட்டார் ராஜா.

குருக்கள் மரத்தைக்கட்டிக்கொண்டு பிரமாணம் செய்தார். உடல் எரிந்து போய்விட்டது.

'எரிச்சுக்கட்டி ஸ்வாமி' என்பது அந்த ஆலய மூர்த்தியின் பெயர். திருநெல்வேலி ஜில்லாவில் அந்த ஆலயம் இன்று உள்ளது.

பிறகு, பிராமணர் தம் தனத்தை எடுத்துக்கொண்டு கிழவர் சொல்லியபடி பசுமாட்டைக்கண்டு கால்வாய் வெட்டினார்.

'கன்னடியன் கால்வாய்' என்பது அதன் பெயர். திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கின்றது. அந்தக்கால்வாயின் பிரதேசங்கள் இன்றைக்கும் செழித்திருக்கின்றன. இந்தக் கதையினால் ஸந்த்யாவந்தனத்தின் பெருமை நன்கு விளங்குகிறது.

எனவே ஸந்த்யா வந்தனம் ஒரு கடமை. அதுசெய்வதால் உலக க்ஷேமம் ஏற்படுகின்றது. ச்ரத்தையுடன் செய்தால் மோக்ஷம் லபிக்கின்றது என்பதைத் தெரிந்துகொண்டு, நமது கடமைகளில்ஒன்றாகச் செய்து வர வேண்டும்.





ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

www.aanmeegamalar.com

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.

ஆன்மிகமலர் .காம்

# உணவு பிரச்சனை தீர்க்கும் கிருஷ்ணர்

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டத்தில் திருவார்பூவில் உள்ள கிருஷ்ணர் கோயில் மிகச் சிறப்பு வாய்ந்த தலமாகும்.

இங்கே இருக்கும் கிருஷ்ணருக்கு எப்பொழுதும் பசித்துக் கொண்டே இருக்குமாம். இவரை பசிப் பெருமாள் என்றும் அழைக்கப்படுகிறார்.

கிருஷ்ணருக்கு பசிக்கும் என்பதால் தினமும் 23.58 மணி நேரமும் திறந்திருக்கும். நாள்தோறும் இரவு 11.58 மணி முதல் 12 மணி வரை. 2 நிமிடங்களுக்கு மட்டுமே கோயில் மூடப்படும். இந்நிகழ்வு 365 நாட்களும் நடைபெறும்.

குறிப்பாக கிரகணங்கள் நடைபெறும்போதும் இந்தகோயில் மூடப்படுவதில்லை.

இந்த கோவிலின் இன்னொரு தனிச்சிறப்பு என்னவென்றால், கோவில் நடை சாத்தி அடுத்த இரண்டாவது நிமிடம் மீண்டும் கோவில் நடை திறக்க தந்திரியின் கைகளில் ஒரு கோடாரியும் கொடுக்கப்படுகிறது.

கிருஷ்ணா பசியை சகித்துக் கொள்ள முடியாது என்று நம்புவதால், ஏதாவது ஒரு காரணத்தால் கதவு திறக்கப்படுவதற்கு தாமதம் ஏற்பட்டால், கோடாரி உதவியுடன் கதவைத் திறக்க அனுமதிக்கப்படுகிறது.

ஏன் கிருஷ்ணருக்கு அடக்கமுடியாத பசி ஏற்பட்டது என்பதற்கு புராண கதையும் உண்டு.

கம்சனைக் கொன்ற பிறகு கிருஷ்ணர் மிக உஷ்ணமாக இருந்தார்.

அந்த நிலையில் இருந்த கிருஷ்ணரே இக் கோவில் மூலவர் சிலை என்று மக்கள் நம்புகின்றனர்.



அபிஷேகம் முடிந்தபின், மூலவரின் தலையை முதலில் உலர்த்தியபின், நைவேத்திம் அவருக்குப் படைக்கப்படும், அதன் பின்னர் அவருடைய உடல் உலர்த்தப்படும்.

கிரகணத்தின் போது கூட கோயில் மூடப்படுவதில்லை. அப்படி மூடினாள் இந்தக் கிருஷ்ணர் பசி தாங்க மாட்டார் என்று மக்கள் நம்புகிறார்கள்.

ஒருமுறை, கோயில்.. கிரகணத்தின் போது மூடப்பட்டது. கதவைத் திறந்தபோது, ஆண்டவரின் இடுப்புப் பட்டை வீழ்ச்சியடைந்ததைக் கண்டார்கள்.

அந்த சமயத்தில் வந்த ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார், கிருஷ்ணர் மிகவும் பசியாக இருப்பதால் தான் அவ்வாறு நடந்தது என்று சொன்னார்.

அப்போதிருந்து, கிரகணத்தின் போதும் அக் கோவில் மூடப்படுவதில்லை.

கிருஷ்ணா தூங்கும் நேரம் தினமும் 11.58 மணி முதல் 12 மணி வரை. 2 நிமிடங்கள் மட்டுமே.

மேலும் இக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் அவசியம் பிரசாதம் பெற்றுக் கொண்டுதான் செல்லவேண்டும், பிரசாதம் பெறாமல் பக்தர்கள் செல்ல அனுமதி இல்லை.

தினமும் 11.58 மணி (ஆலயத்தை மூடுவதற்கு முன்பு) கோவில் பூசாரி சத்தமாக "இங்கு யாராவது பசியாக உள்ளீர்களா?" என கேட்பதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த கோயில் பிரசாதம் சாப்பிட்டால், சாப்பிடும் பக்தர்கள் வாழ்நாள் முழுவதும் பசி யால் வாட மாட்டார்கள். மேலும் வாழ்நாள் முழு வதும் உணவுப்பிரச்சனை இருக்காது என்று கூறப்படுகிறது.

இந்த கோயிலுக்கு கேரள மாவட்டம் கோட்டயம் மாவட்டத்திலிருந்து செல்ல வாகன வசதி உள்ளது. இந்த நேரத்தில்தான் செல்ல வேண்டும் என்ற விதிமுறை இல்லை.

இரண்டு நிமிடம் மட்டுமே கோவில் நடை அடைக்கப்படுவதால், எந்நேரமும் இத்திருக் கோயில் திறந்திருக்கும். அநேகமாக உலகிலேயே நாள் முழுவதும் திறந்திருக்கும் ஒரே கோயில், இக் கிருஷ்ணர் கோயிலாகத்தான் இருக்கவேண்டும்.



## ஆன்மீக வாழ்வில் வெற்றி பெற உதவுவது

1. நிபந்தனையற்ற அன்பு.
2. எதையும் மன்னித்துவிடும் குணம்.
3. சரியாக புரிந்துக் கொள்ளும் தன்மை.
4. அபரிமிதமான நன்றியுணர்வு.
5. குரு பக்தி.
6. சரணாகதி.
7. தொடர்ந்த பயிற்சி.
8. ஏற்றுக் கொள்ளும் பக்குவம்.
9. மௌனம்.

## ஆன்மீக வாழ்வில் மிகப் பெரும் தடைகள்

1. சோம்பேறித்தனம்.
2. பயம்.
3. உண்மை அது தான் என தெரிந்தும் சந்தேகம்.
4. எல்லாம் தெரிந்தது போல நடிப்பது, விவாதிப்பது.
5. மூட நம்பிக்கை.
6. தான் உணராமலே அதை உண்மை என நம்புவது.
7. குரு பக்தியின்மை.
8. அதீத அகங்காரம்.



# நன்னெறிக் கோட்பாடுகள் சாத்திரங்களில் பொதுவானவையாக உள்ளன

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "முக்கியமான மத நன்னெறிக் கோட்பாடுகளை இந்துமதச் சாத்திரங்களில் நாம் காண்கிறோம். கீதையின் செய்தி, நன்னெறிக் கோட்பாடுகளை மீறுவது ஏன் தவறாகும் என்ற காரணத்தையும் உள்ளடக்கியுள்ளது. கீதை விவேகத்துடன் எச்சரிக்கிறது.

"கர்மத்தின் வசப்பட்டு சாத்திரத்தின்
ஆணையை மீறி நடப்ப வன் எவனோ
அவன் பரிபூர்ணனாகான், சுகம் பெறான்,
முக்தியடையான்."
(பகவத் கீதை அத். 16ஸ்லோகம்23)

"மதத்தைப் பின்பற்றுபவராக இல்லாமல், நன்னடத்தை உடையவராக நீங்கள் இருக்கக் கூடும். ஆனால் மத அனுஷ்டானத்தில் நன்னடத்தைக் கோட்பாடுகள் ஒரு தேவையான தொடக்கமாகின்றன. ஏனெனில் உண்மையான மதம் நன்னடத்தையையும்விட ஆழமானது.

அது இறைவனுடன் தொடர்புகொள்வதாகும். உங்களுடைய தவறுகளின்மீது நீங்கள் முழு கவனத்தையும் செலுத்தவோ அல்லது உங்களை ஒரு பாவி என்று எண்ணவோ கூடாது. நீங்கள் இறைவனின் ஒரு குழந்தையென்று உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். மேலும் "நானும் பரம்பொருளும் ஒன்றே" என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## மறுபிறப்பு

மேலும் அவர் அருளுகிறார்: "பகவத் கீதையில் கிருஷ்ணனால் அத்தனை அழகுடன் விவரிக்கப்பட்டுள்ள மறுபிறவிக் கருத்து, மிகவும் உதவிகரமான மற்றும் எழுச்சியூட்டும் ஆன்மீகக் கோட்பாடுகளில் ஒன்றாகும். அது இல்லாமல் இறைவனின் நீதியை நாம் புரிந்துகொள்ள முடியாது. ஒரு குழந்தை ஏன் முடமாகப் பிறக்கவேண்டும்? இறைவன் ஒரு குடும்பத்திற்கு ஆரோக்கியமும் வலிமையும் நிறைந்த இரண்டு குழந்தைகளையும், முடமான ஒன்றையும் அனுப்ப வேண்டும்? நாம் அனைவரும் இறைவனின் பிரதிபிம்பத்தில் படைக்கப்பட்டிருக்கிறோம் என்றால், இதற்கான நீதி எங்கே உள்ளது? மறுபிறப்பு மட்டுமே இதை விளக்க முடியும். முடமான குழந்தையானது முற்பிறவி ஒன்றில் இறைவனின் விதிகளை மீறிய ஓர் ஆன்மாவாகும். அதன் விளைவாகத் தனது கால்களின் பயனை இழந்துள்ளது.

மனம் தான் தேகத்தை வடிவமைப்பதாலும்,மேலும் இந்த ஆன்மாவானது ஆரோக்கியமானகால்களைப் பெற்றுள்ள உணர்வு நிலையை இழந்துவிட்டிருந்தாலும், அது மீண்டும் இந்தப் பிறவிக்கு வந்தபோது அதனால் குறையில்லாத ஒருஜோடி கால்களை உருவாக்க முடியவில்லை. எனவே நாம் வந்தேயாக வேண்டும். நமது இழந்த பூரணத்துவத்தை மீளப் பெறும்வரை, நாம் மீண்டும் வந்தாகவேண்டும். எவன் பூரணமானவனாக ஆகிறானோ அவன் பூமிக்கு இனிமேலும் திரும்பவேண்டியதில்லை.



ஆசையை வென்றோர் இறைவனுடன் ஒன்றிணைந்தவராவர். பகவத்கீதை வாக்குறுதி அளிக்கிறது. "ஓ அர்ஜுனா! இதுவே பிரம்மநிலைப் பேறு ஆகும். இதை அடைபவனுக்கு மீண்டும் மோகமில்லை. மரண காலத்திலாயினும் (ஸ்தூலத்திலிருந்து சூட்சமத்திற்குச் செல்லுதல்) இதில் நிலைத்திருப்பவன் பிரம்ம நிர்வாணத்தை அடைகிறான். (பகவத்கீதை அத் 2 ஸ்லோகம் 72) தேக ஆசைகளை நீங்கள் வெல்லும்போது இறைவனை விட்டு நீங்கள் இனிமேலும் அகல முடியாது.

ஆசை உங்களை உலகிற்கு மீண்டு கொண்டு வருகிறது. நாம் கெட்டழிந்து மீண்ட குழந்தை களாக இருந்துவருகிறோம். மேலும் நமது ஆசை களை நாம் கைவிட்டால் ஒழிய, நாம் இறை வனிடம் திரும்பமுடியாது. நம் இதயங்களில் இன்னும் ஆசைகளுடன், நாம் திடீரென்று இப்பூவுலகை விட்டுச்செல்ல நேர்ந்தால், நாம் அவைகளை நிறைவேற்றும்வரை மீண்டும் இங்கு வந்தாகவேண்டும். இறைவனிடம் நாம் மீண்டும் செல்லமுடியும்முன்பு சுயபூரணத்துவத்தை மீளப் பெறுவது அவசியமாகிறது. புயல் வீசும்போது சமுத்திரத்திலிருந்து அலை எழுகின்றது.

ஆனால் சமுத்திரம் மீண்டும் அமைதியுற்றதும், அலை சமுத்திரத்தினுள் மீண்டும் அமிழ்ந்துவிடலாம். நமக்கும் இம்மாதிரியே ஆகும். உலக ஆசைகளெனும் புயல் ஓய்ந்ததும் இறைவனாகிய சமுத்திரத்தில் நாம் மீண்டும் கரைந்துவிடலாம்."

ஆபூர்யமாணமசலப்ரதிஷ்டம் ஸமுத்ரமாப:
ப்ரவிசந்தி யத்வத்
தத்வத் காமா யம் ப்ரவிசந்தி ஸர்வே ஸ
சாந்திமாப்நோதி ந காமகாமீ.

மலையிலிருந்து புறப்பட்டு சமுத்திரத்திற்கு நேராக நிறைந்து வழிந்து குதித்து பாய்ந்தொழுகிக் கொண்டிருக்கும் நதிகள் என்பது போன்று யாருடைய மனதில் காமக்குரோத, லோப, மோக எண்ணங்கள் மிக சக்தியுடன் ஒழுகிக்கொண்டிருக்கிறதோ, அவற்றை விரும்பிக்கொண்டிருக்கின்ற மேற்படி அறிவிலி ஒருக்காலும் சாந்தியை அடைய மாட்டான். இதுபோன்ற எண்ணங்களால் மனம் கொந்தளித்துக்கொண்டிருக்கும்போது சாந்தியும் பரம்பொருளைப்பற்றிய அறிவும் கிடைக்காது. மனதை அமைதிப்படுத்தியபின்னர் மட்டுமே பரம்பொருளைப்பற்றிய விவேகம் உண்டாவதற்கு வாய்ப்புள்ளது. (பகவத்கீதை அத் 2 ஸ்லோகம் 70)

விஹாய காமான் ய: ஸர்வான் புமாம்ச்சரதி
நிஸ்ப்ருஹ:
நிர்மமோ நிரஹங்கார: ஸ சாந்திமதி கச்சதி.

எல்லா ஆசைகளையும் அகற்றியவண்ணம் அகங்காரமின்றி யார் இருக்கிறானோ அவன் காலப் போக்கில் சாந்தி அடைகிறான். கொந்தளிக்கும் மனதிற்கு சாந்தி எவ்வாறு கிடைக்க இயலும். எனவே உலகப்பொருளாசைகளிலிருந்து புலன்களை அடக்கி இறைவனின் சிந்தனையால் மனதில் அமைதியை அதிகரிப்பதற்கு முயற்சிக்கவேண்டும்.
(பகவத் கீதை அத் 2 ஸ்லோகம்:71)

பகவத் கீதையில் எவ்வளவு அழகாகவும்நேர்த்தியாகவும் பகவான் கிருஷ்ணன் அருளியிருக்கிறார். அன்பு குருதேவர் கூறியதுபோன்று நன்னெறிக் கோட்பாடுகளை மீறாமல் சாத்திரங்கள் என்ன கூறுகிறதோ அதை ஒரு மனிதனாகப் பிறந்த வன் கடைபிடித்துதான் ஆகவேண்டும்.

அவற்றை மீறும்போது ஏராளமான துன்பங் கள் விளைய நேரும். உதாரணமாக, அரசு ஆணைகளையும் விதிமுறைகளையும் துணையாக வைத்துக்கொண்டுதான் ஓர் அலுவலகத்தை சரியான முறையில் இயக்கமுடியும். அவற்றைப் பின்பற்றாமல் பணிசெய்தால் அதனால் என்ன விளைவுகள் வந்தாலும் நேர்கொள்ள வேண்டியதுதான்.

52
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

நாம் நமது எல்லா கர்மவினைகளையும் அனுபவித்துதான் ஆக வேண்டும் என்பதில்லை. பிறருடைய வாழ்க்கையிலிருந்து நாம் நிறைய கற்றுக்கொள்ள வேண்டும் என்று குருதேவர் கூறியுள்ளார். பிறர் வாழ்க்கையைப் பார்த்து,

"நமக்கும் இதெல்லாம் தேவையா?" என்ற கேள்வி நம் ஒவ்வொருவரின் மனதில் எழவேண்டும். யதார்த்தமான, இதயப்பூர்வமான கேள்விகளுக்கு இறைவன் நிச்சயம் பதிலளிப்பான். அவனுடைய வழிகாட்டுதலுக்கிணங்க நாம் நமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும். "அடுத்த பிறப்பு எதற்கு" என்ற கேள்வி ஒருவனுடைய மனதில் எழும் வாய்ப்பு வந்தால் அதைத்தொடர்ந்து நிறைய கேள்விகளும் அதற்குரிய பதில்களும் வந்து கொண்டேயிருக்கும். கேள்வி கேட்கவைப்பதும் இறைவன்தான்; பதில் அளிப்பதும் இறைவன்தான்.

இம்மாதிரியான கேள்விக்குக் காரணம்அவனுடைய நன்னெறிக் கோட்பாடுகளைக் கடைபிடிப்பதே யாகும். சாத்திரங்களை மதிக்கின்ற வனும் அவற்றைக் கடைபிடிப்பவனும் இறைவனை நாடுகிறான் என்று கூறலாம். அந்த சாத்திரங்களும் இறைவனேயாகும். ஒரு மனிதன் பலபிறவிகள் மூலம் அவற்றை உணர்ந் திருப்பான்.

அப்படிப்பட்டவன் "அடுத்த பிறப்பு எனக்கு இனி எதற்கு? எல்லாவற்றையும் இப்பிறவி மூலம் தெரிந்து விட்டோமே. இவ்வாழ்க்கை எனக்கு பல்வேறு சுவைகளை தந்துள்ளது. உப்பு, புளிப்பு, துவர்ப்பு, கசப்பு, இனிப்பு, காரம் போன்ற சுவைகளுக்கு சமமான அனுபவங்கள் அனுபவித்தாகிவிட்டது.

எனவே எல்லாவற்றையும் இப்பிறவியிலேயே அறியமுடிந்தது. இப்பிறவியில் அனுபவித்தைத்தானே அடுத்த பிறவியிலும் அனுபவிக்கப்போகிறேன். அப்படிப்பட்ட பிறவி தேவையில்லை; நிச்சயமாகத் தேவையில்லை. அதெல்லாம் ஒரு முறை அறிந்தால் போதுமானது.

முற்பிறவிகளிலும் அறிந்திருக்கலாம்.எனவே இனிமேல் அது "தேவையில்லை" என்று உறுதி கொள்வான். ஒரு புத்திசாலியான மாணவனுக்கு ஆசிரியர் ஒருமுறை பாடம் சொல்லித்தந்தால் அவன் அதைத்தன் புத்தியில் வெகுவிரைவில் ஏற்றிக்கொள்வான். அதுபோன்று இந்த உலகவாழ்க்கையாகின்ற பாடசாலையில் நம் அனுபவங்களாகின்ற பாடங்கள் விரைவில் முடிவெடுப்பதற்குக் கற்றுத் தருகின்றன. நமக்குப் பிறவி வேண்டுமா வேண்டாமா என்ற முடிவு நம் கையில்தான் உள்ளது. அதைவிடச் சிறந்தது என்னவென்றால், பிறருடைய அனுபவங்களைப் பார்த்துவிட்டு "சென்று திரும்புவதைவிட நின்று திரும்புவதே சிறப்பு" என்ற பழமொழிக்கேற்ப பள்ளத்தாக்கில் விழுவதற்கு முன்னர் நம்மை புத்திசாலித்தனமாக எச்சரிக்கைப்படுத்தி பின்வாங்குவது வாழுவது மிகவும் நன்று. அதை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். 'எல்லாம் ஒருமுறை (ஒரு பிறவியில்) அறிந்தால் போதும்' என்ற திட மனப் பான்மை வரவேண்டும். பின்னர் அவ்வழியில் மேலும் செல்வதற்கும் புத்தியை கூர்மையாக்கி மனதைத் தூய்மைபடுத்துவதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் அன்பை வளர்ப்பதற்கும் உள்ள உரிய ஒரே வழி தியானமாகும். இப்புனிதமான வழி இறைவனுடனுள்ள காதலுக்கு நங்கூரமாக அமைகிறது. அப்பொழுது பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை பெறமுடியும். அதுமட்டுமின்றி;

1. குருதேவரின் சரீரமான யோகதா ஒரு புனித சரணாலயமாகும். எத்தனை ஆத்மாக்கள் சென்றாலும் யோகாதா எற்றுக்கொள்ளும்.

2. இந்த சரணாலயத்தை 'இறை அருளெனும் தேன் சுரக்கும் யோகதா' என்றும் கூறுவது சிறப்பு.

3. இறைவனின் சாக்ஷாத்காரமாகின்ற 'சர்வ சாந்தி அமிர்தம்' கிடைக்குமிடம் யோகதாவேஆகும். எனவே இறை அமிர்தத்தைப் பருக அனைவரும் வாரீர்!!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909





மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர் .காம்
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033

இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மு.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572

வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033




# சிருஷ்டி கர்த்தாவை அறி

பூமியில் எது சரியாக இருக்க வேண்டும்? பகவானுக்கு தெரியாது; உனக்கு தான் தெரியும். இதெல்லாம் பகவான் செய்து கொடுத்தால்? உள்ளதை உள்ளபடி பேசினால் தான் பகவானை நினைக்க முடியும். உள் நுணுக்கங்கள் தெரிந்து கொண்டால் தான் அவன் பெருமை நமக்குத் தெரியும். உனக்குத் தெரிய பேசு! மாணத் தகுந்தது என்று ஆச்சரியப்படு.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கிலா அலகிலா விளையாட்டு டையார் அவர் தலைவர் அன்னவர்க்கே சரண்நாங்களே!'

அவனுக்கு மட்டுமே சரண்!



என் தலைவன், குரு, செடி, கொடி, நிலவு, சூரியன்–அவன் தான் சிருஷ்டி செய்தான். அப்போது அவனை பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். ஏன்? அதீதமான சக்திகள் எல்லாம் கையிலே பிடித்து வைத்துக் கொள்ளும்போது பகவான் மீது மாணத்தகுந்தது.

இவை பட்டம் (சர்ட்டிபிகேட்) இல்லை. ஆத்மார்த்தமாக தெரிந்து கொண்டால், உணர்தல் வேண்டும். பகவத் விஷயம் அதீதமாகத் தெரிந்து கொள்! இதில் மதம், ஜாதி கிடையாது. இருக்கு என்று நினைத்தால் இறங்கி விடுவான்.

எண் ஜான் உடம்புக்கு உடலே பிரதாணம். ஓணான் தல மனிதனுக்கு இருந்தால்?

ஓணான் ஓணானாக இருக்க வேண்டும்... முள் வேலியில் எப்படி நகர்ந்து போவது என்று தெரியும். எலிக்கு ஓணான் குணம் இருந்தால் செத்துப் போய்விடும்.

ரகசியம் – இந்த சிருஷ்டியைப் பார்த்து மனிதன் செயற்கையாகப் படைத்தான். ஒன்றைப் பார்த்து ஒன்றை தெரிந்து கொள். பறவை யை பகவான் பூமியில் பிறக்க வைக்க இல்லையெனில் ஆகாய விமானம்(ஏரோபிளேன்) பண்ணி இருக்க முடியுமா? சிருஷ்டி கர்த்தாவை தெரிந்து கொள்! ஏன் இந்த வண்ணம் படைத்தான் என்று தெரியும். படைப்பாளி ஒரு சட்டம் அமைப்பானானால், அதற்குள் அது விழும்.

இது காலம் காட்டும் கடிகாரம்.. எந்த கோணத்தில் இருக்கிறது? கோணங்கள் இருந்தால் தான் பகவானைப் பிடிக்க முடியும். ஆங்கிலத்தில் 'டைமன்ஸன்ஸ்' என்று பெயர். இதற்குள் காலம் அடங்கி இருக்கிறது. தத்துவத்தை நேராகப் பார்க்க நேராக கோடு போடு! தத்துவம் எங்கும் பரவும். அதுபோல், காலத்தை வட்டத்துக்குள் அடக்கிவிடலாம்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028


ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




ஆன்மிகமலர் மெயில் புக்



www.aanmeegamalar.com

# திருப்போரூரில்

# 21 அடி ஆஞ்சநேயர்



காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்போரூர் நகரத்திற்கு அருகில் இயற்கை எழில் கொஞ்சும் மலைகள், காடுகள், ஏரி, பச்சைப்பசேல் பயிர்கள் இவை அனைத்தும் அமையப்பெற்ற ஒரு கிராமம் பெருந்தண்டலம். இந்த கிராமத்தில் பழமையான சிவன் கோயிலும் அம்மன் கோயிலும் அமைந்துள்ளன.

ஒரு சிறிய குன்றில் அமைந்த அம்மன் கோயில் நான்கு தலைமுறைகளுக்கும் மேலாக வழிபாட்டில் இருந்தது. இந்த அம்மன் கோயில் நாளடைவில் மெல்ல மெல்ல சிதில மடைந்தது.

பழமையான இந்த அம்மன் கோயிலை புதுப்பிக்க விரும்பிய கிராம மக்கள் ஒருநாள் ஒன்று கூடி விவாதித்தனர். இந்த விவாதத்தின் போது அனைவரும் ஒருமித்த மனதோடு அம்மன் கோயிலை சரி செய்ய வேண்டும் என்றும் மேலும் இந்த குன்றில் ஒரு ஆஞ்சநேயர் சிலையினை பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தையும் வெளிப் படுத்தினார்கள்.

இது ஆஞ்சநேயரின் விருப்பம் எனக் கருதிய ஊர் மக்கள் அமையவிருக்கும் ஆஞ்சநேயருக்கு "ஸ்ரீ பெரு ராம ஆஞ்சநேயர்" என்ற திருப்பெயரினைச் சூட்டி கோயில் அமைக்கும் பணியினை உடனே துவக்கினார்கள்.

கோயில் அமைக்கும் பணிகள் மளமளவென நடை பெற்றன. முதலில் 23 பிப்ரவரி 2013 அன்று பால ஆஞ்சநேயர் சிலை ஒரு சிறிய சன்னிதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் 21 அடி அளவில் சிமெண்ட் காங்கிரீட்டில் ஸ்ரீ பெரு ராம ஆஞ்சநேயருக்கு சிலை அமைக்கலாம் என்று விவாதிக்கப்பட்டது. ஆனால் பலர் ஒரே கல்லில் ஆஞ்சநேயருக்கு சிலை வடிக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்தனர். தொடர்ந்து இந்த முடிவு அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு சிலை அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டன.

தொடக்கத்தில் 5 அடி பீடமும் 16 அடி சிலையும் அமைக்க விவாதிக்கப்பட்டது. ஆனால் பெரும்பாலோர் 6 அடி பீடமும் 21 அடி சிலையும் மொத்தமாக 27 அடி அமைய வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்தினர். இந்த முடிவு 19 ஆகஸ்ட் 2013 அன்று எடுக்கப்பட்டு சிலை அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டன.

ஆஞ்சநேயரை மனதுள் தியானித்து அவரு டைய திருவுருவச் சிலையினை அமைக் கும் பணியினை திருச்சிக்கு அருகில் அமைந்த துறையூரைச் சேர்ந்த சிற்பியிடம் ஒப்படைக்கப் பட்டது.

பெருராம ஆஞ்சநேயரின் திருவருளால் அனைத்து பணிகளும் எவ்வித தடையுமின்றி முடிந்தன. 21 அடியில் அமைந்த பெரு ராம ஆஞ் சநேயரின் திருவுருவச்சிலை பெருந்தண்டலம் கிராமத்தில் குன்றில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 15, 16, 17 ஆகஸ்டு 2014 ஆம் ஆண்டில் கும்பாபி ஷேகமும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டல பூஜைகள் நடத்தப்பட்டு 04 அக்டோபர் 2014–ல் மண்டல பூஜை நிறைவு பெற்றது. இத்தகைய ஆச்சரியமான விஷயங்கள் ஆஞ் சநேயரின் திருவருளால் வெகு இனிதாக நடந்து முடிந்தன. இதைத் தொடர்ந்து ஆஞ்சநேய சுவாமிக்கு நான்கு மூலைகளிலும் இரும்புத் தூண் மற்றும் மேற்புரம் தகடால் கூரையும் கொண்ட மணி மண்டபம் அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டு இதற்கான பணிகள் 28 ஆகஸ்டு 2014 அன்று காலை 7.45 மணி முதல் 8.45 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் தொடங்கப்பட்டது.

- ஆ.ஆனந்த வேலு
09282347469









# திசை அறிந்து குளித்தால் பல பிரச்சனை தீரும்

குளிப்பதற்குக் கூட திசையா?... இதெல்லாம் ஏமாற்று வேலை, மூடப்பழக்கம் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் நம்முடைய முன்னோர்கள் எதையுமே காரணம் இல்லாமல் சொல்லவில்லை.

அவர்கள் செய்த ஒவ்வொரு செயல்களுக்குப் பின்னும் பல ஆயிரம் அர்த்தங்கள் இருக்கின்றன.

அந்த வகையில், குளிப்பதற்குக்கூட எப்போது குளிக்க வேண்டும்.

எந்த திசையில் நின்று குறிக்க வேண்டும் என்று வரையறுத்து வைத்திருக்கிறார்கள்.

குளிக்கும் முறைகளில் உள்ள அபூர்வ ரகசியங்கள்.

குளிக்கும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று குளிக்கவேண்டும். இவை இரண்டும் குளிப்பதற்கான உத்தம திசைகளாகும்.

கர்மம் செய்தபின்னும், மயானத்திற்கு சென்று வந்தால் மட்டும் தெற்கு நோக்கி நின்று குளிக்கலாம். மேற்கு திசை நோக்கி நின்று குளித்தால் உடல்வலி வரும்.

தினமும் கங்கா ஸ்நானம் செய்யமுடியும்.

குளிக்கும் முன் ஒரு குவளை தண்ணீரில் மோதிரவிரலால் ஓம் என்று த்யானம் செய்து எழுதுங்கள். அந்தநீர் அப்போது முதல் கங்கை நீராக மாறிவிடும்.

இந்த உடலுக்குள் நீங்களே வந்திருந்து, இதை உங்களுக்கு செய்யும் அபிஷேகமாக ஏற்றுக்கொள்ளுங்கள் என்று இறைவனிடம் வேண்டிக்கொண்டு குளித்தால், உள்பூஜையின் அங்கமாக இறைவனுக்கு அபிஷேகமும் ஆகிவிடும்.

அக்னி எப்போதும் மேல்நோக்கியே பயணிக்கும். உடலுக்குள் இருக்கும் அக்னி கீழிருந்து மேல் ஏறுவதுதான் சரி. தண்ணீரை கால் முதல் மேல் நோக்கி நனைத்து வந்து கடைசியில் தலையில் ஊற்றிக் கொள்ளவேண்டும்.

நமது மண்டை ஓடுக்கு எப்படிப்பட்ட அக்னியின் வேகத்தையும் தாங்குகிற சக்தி உண்டு. காலிலிருந்து பரவும் குளிரிச்சி மேல் நோக்கி பயணிக்கும் போது உள் அக்னியானது தலையை நோக்கி பயணிக்கும். அதுவே சரியான முறை.

தலை முதல் கால் வரை உள்ள பின் பாகத்தை "பிரஷ்டம்" என்பர்.

அதில் நம் முதுகு பாகம் தான் மிகப்பெரியது. அங்கு தான் அக்னியின் வீச்சம் கூடுதல் வேகமாக பரவும். ஆதலால், குளித்து முடித்தவுடன், முதலில் முதுகு பாகத்தைதான் துவட்ட வேண்டும்.

அதில் ஒரு நன்மையும் உண்டு ஆற்றில் குளிக்கும் போது முதுகில் ஏதாவது அட்டைபூச்சிகள் இருந்தால் கூட தெரியாது ஆகையால் தான் முதலில் முதுகைப் துடைக்க சொன்னார்கள்.

டவலை குளிக்கும் நீரிலே நனைத்து பிழிந்து துவட்டுவது தான் உத்தமம். ஆனால் நாம் அனைவரும் ஈரம் படாத துண்டைத்தான் உபயோகிக்கிறோம். உலர்ந்த துணியானது உள்சூட்டை வேகமாக பரவச்செய்து பலவித உள் நோய்களை உருவாக்கும்.

பிறருடன் வாய்திறந்து பேசாமல் செய்கின்ற மூன்று வேலைகளில் ஒன்று, குளிக்கும் நேரம்.

ஆற்றில் குளிப்பவர்கள் ஓடி சென்று அதில் குதிக்காமல், கரையில் நின்று, சிறிது நீரை எடுத்து தலையில் தெளித்தபின், நீர் கலங்காமல், ஒரு இலை நீரில் விழுகிற வேகத்தில் மெதுவாக இறங்கி சென்று குளிக்கவேண்டும்.

நீரில் காரி உமிழ்வதோ, துப்புவதோ கூடாது. நீரின்றி ஒரு உயிரும் இல்லை. நீரை விரயம் செய்ய கடன் அதிகரிக்கும்.

கடல் நீர் ஸ்நானம் திருஷ்டி தோஷங்களையும், சகல தோஷங்களையும் அறுக்கும். வெள்ளியன்று கடல் நீரில் குளிப்பது நல்லது அல்ல.

"கோவில்கள் இல்லாத ஊரிலும் ஆறுகள் இல்லாத ஊர்களிலும் குடி இருக்க வேண்டாம்" என்பார்கள் பெரியோர்கள். ஏன் தெரியுமா வெளியே சுத்த படுத்த ஆறுகள், உள்ளே சுத்தம் படுத்த கோயில்கள். இதை சரியாக பயன் படுத்த கூடிய மாநிலத்திலே கேரளா தான் முதலிடம் ஆகையால் தான் கேரளாவில் இதனை அதிகமாக கடை பிடித்து கொண்டு இருக்கிறார்கள்.அதனால் தான் அவர்கள் முகம் பளிச்சென்று இருக்கிறது.

காலையில் எழுந்ததும் சிவ சக்ரத்தை மன தில் நினையுங்கள்.

பல் தேய்க்கும் போது ஆள் காட்டி விரல் உபயோகிக்காதீர்கள். நடு விரலில்தான் பல் தேய்க்க வேண்டும்.

குளித்த முடித்த பின்பு ஓம் ஸ்ரீ கோமதி சங்கர நாராயணா என்று மூன்று முறை கூறுங் கள். குளித்தபின்பு 20 நிமிடம் களித்து தான் உணவு உண்ணுங்கள்.

வாரம் இரண்டு முறை எண்ணை ஸ்நானம் செய்யுங்கள். ஆண்கள் புதன், சனி; பெண்கள் செவ்வாய், வெள்ளி.

வருடம் ஒருமுறையேனும் கண்டிப்பாக கடல் குளியல், குலதெய்வ பூசை, வழிபாடு செய்யவேண்டும்.

மு.கிருஷ்ணா மோகன்
ஸ்ரீ கால பைரவி ஜோதிட நிலையம்
போன்: 8526223399



# மனிதன் இருக்கும் வரை ஆன்மீக சிந்தனை இருந்து கொண்டே தான் இருக்கும்

மிருகங்களுக்கும், மனிதனுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஒரு வகையில் பார்க்கப் போனால் மனிதனிடம் இருக்கும் ஆற்றல்களை விட, மிருகத்திடம் இருக்கும் ஆற்றல் சிறப்பானதாகவும், பெரியதாகவும் இருக் கிறது. யானையின் பலம் மனிதனால் கற்பனை செய்தே பார்க்க முடியாதது. சிறுத்தையின் காலில் இருக்கும் வேகம், மனிதன் பெறவேண்டும் என்றால், பத்து ஜென்மம் எடுத்தாலும் முடியாது. அது நவீனமான விஞ்ஞான கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி இருக்கிறோம் என்று இறுமாப்பு கொண் டிருக்கின்ற மனிதன், இயற்கை சீற்றங்களை பல நாட்களுக்கு முன்பே மிருகங்கள் அறிந்து கொள்ளும் ஆற்றலை கண்டு நாணம் அடைந் திருக்கிறான். பிறகு எந்த விஷயத்தில் நமக்கும், மிருகத்திற்கும் வேறுபாடு இருக்கிறது?



சிந்தனை செய்கின்ற ஆற்றல், சிந்தனையை செயல்வடிவம் படுத்துகிற துணிச்சல், மிருகங் களுக்கு இல்லை. அதனால், மனிதன் கடவுள் படைப்பில் மிக உயர்ந்த சிருஷ்டி என்று மெச்சப் படுகிறான் என்று பலரும் கூறுகிறார்கள் இந்த கூற்று சரியானதாகவே படுகிறது. மனிதனை விட ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தது யானை. ஆனால், அந்த யானையால் இதுவரை ஒரு சிறிய சக்கர நாற்காலியை கூட செய்யமுடியவில்லை. சிறுத்தை நம்மை விட வேகமாக ஓடக்கூடியது தான். ஆனால், நமது சிந்தனையில் உதித்த விமானத்தின் முன்னால் சிறுத்தை வெறும் தூசு என்று தெளிவாகிறது. இப்படி மனிதன் தனது சிந்தனையாலும், அறிவாலும் பெற்ற பரிசுகளும் ஞானங்களும், அனு பவங்களும் மிக அதிகம். அவன் தனது அறிவின் அனுபவத்தால், இந்த உலகில் எதுவுமே நிலையாக இல்லை.

நிலையாமை மட்டும் தான் இருக் கிறது என்பதை என்றோ அறிந்துகொண் டான்.

நிலையாமை என்றால், அதை இரண்டு வகையாக ஞானிகள் பிரிக்கிறார்கள். ஒருவகை பொருள் நிலையாமை. இன்னொருவகை உயிர் நிலையாமை. இதில் பொருளை பற்றி மனிதன் கவலைப்படவில்லை. பொருளாதாரம்என்பது சுழலுகிற சக்கரத்தி ற்கு இணையானது.

இன்று ஒருபக்கம் இருக்கும் நாளை வேறொரு பக்கம் இருக்கும். நம் கையில் இல்லாமல் நழுவி போனாலும் கூட, எந்த வகையிலாவது அதை திரும்ப பெற்று விடலாம் என்று நம்பினான். அத னால், பொருள் நிலையாமையை பற்றி அதிகமாக அவன் அலட்டி கொள்ளவில்லை. ஆனால், உயிர் நிலையாமை என்பது மனிதனை வெகுவாக பாதித்தது.

ஒன்பது ஓட்டை உடைய உடம்பிற்குள் ஓடி கொண்டிருக்கின்ற மூச்சு காற்றானது வெளி யில் போய்விட்டால் திரும்ப வரவே வராது. சந்தனமும், ஜவ்வாதும் பூசி அலங்கரிக்கப்பட்ட சரீரம் அழுகி நாற்றம் எடுக்க ஆரம்பித்துவிடும். பாலும், நெய்யும் கொடுத்து வளர்த்த உடம்பை நெருப்புக்கும், மண்ணுக்கும் கொடுத்துவிட வேண்டியது தான். நேற்று வரை அண்ணன் என்றும் அத்தான் என்றும் அழைத்தவர்கள் இன்று பிணம் என்றும், பேய் என்றும் அஞ்சி ஒதுக்குவார்கள். தகப்பனாக இருந்து தற்காக்க வேண்டிய பிள்ளைகளை தவிக்க விட்டு விட்டு மீண்டு வரவே முடியதாத எமபுரிக்கு போய் விடுவோம். எல்லாமே சூனிய மாகிவிடும் என் பதை தெளிவாக மனிதன் புரிந்து கொண்டான்.



மனித வாழ்க்கை நிலையற்றது. உடம்பில் உயிர் தங்கும் காலம் மிக குறுகியது என்பதை உணர்ந்து கொண்டவுடன், மரணபயம் என்பது இயற்கையாக வந்துவிட்டது. இறப்பிற்கு பிறகு, நமது உயிர் எங்கே போகும் என்னவாகும், என்று மனிதனுக்கு முற்றிலும் தெரியாது. இதனால், மரணத்திற்கு பிறகுடைய வாழ்க்கை இருட்டாக புரியவே புரியாத புதிராக இருந்ததனால், மரண பயம் இன்னும் அதிகமாகிவிட்டது.

மரணத்தை பார்த்து எப்போது மனிதன் அச் சப்பட துவங்கினானோ அப்போதே கடவுள் நம்பிக்கை முளைவிட்டு விட்டது எனலாம். வயது குறையாமல், உடம்பு தளராமல் மரணம் இல்லாமல் மனிதனால் நிலையாக வாழமுடியும் என்ற நிலை வந்துவிட்டால், மரண பயம் என்பது மனிதனிடம் இருந்து போய்விட்டால் கடவுள் நம்பிக்கை என்பதும் காற்றில் கரைந்து விடும். நாத்திகர்கள் கருதுவது போல ஆத்திக சிந்தனைக்கு சாவு மணி அடித்துவிடலாம். ஆனால், இன்று வரை யில் சாகாமல் இருக்கும் அறிய வரத்தை எந்த மனிதனாலும் பெறமுடியவில்லை. இனியும் பெற முடியும் என்ற நம்பிக்கையும் இல்லை எனவே மனிதன் இருக்கும் வரை ஆன்மீக சிந்தனையும் இருந்து கொண்டே தான் இருக்கும்.

தோன்றுவது, வளர்வது இறுதியில் பூஜ்யமாகி அழிந்து போவது, அதாவது மரணிப்பது என்பது உலகத்தின் உள்ள பொருட்கள் அனைத்துக்கும் விதிக்கப்பட்ட பொது விதியாகும். இந்த விதிதான் ஆதிகாலம் தொட்டு




இன்றுவரை நடந்துவருகிறது என்பதை நமது வரலாற்று பக்கங்களில் தெளிவாக காணமுடிகிறது. ஒரு நொடி கூட இந்த உலகில் எதுவும் நிலைத்திருப்பது இல்லை.

கண்ணுக்கு தெரிபவைகளும், தெரியாதவைகளும் நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கிறது. ஆத்மா மட்டும் தான், உயிர் மட்டும் தான், மாறாமல் இருக்கிறது என்று ஞானிகளின் ஒருவகையினர் கூறினாலும், ஆசிய ஜோதி என்று அழைக்கபடுகின்ற புத்தர், அந்த ஆத்மா கூட மாறிக்கொண்டே இருக்கிறது என்று சொல்கிறார். உலக வாழ்க்கை ஓடி கொண்டே இருக்கும் தொடர் நீரோட்டம் என்று ஐரோப்பிய ஞானிகள் கூட கூறுகிறார்கள்.

நாளை இறக்கபோகிறவர்கள் இன்று இறந்தவர்களை பார்த்து அழுவது வேடிக்கை என்றும், முடிசூடும் மன்னரும் காலம் வந்தால் பிடிசாம்பல் ஆவார்கள் என்றும், பட்டினத்தார் அழகாக பாடுகிறார். உலகுக்கே பொதுமறை தந்த வள்ளுவன் கூட உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பதும் போலும் பிறப்பு என்று கூறி நிலையாமைக்கு தத்துவ விளக்கங்களை தருகிறார்கள். அறிவியலும், பலதேசத்து அறிஞர்களின் தத்துவங்களும், வரலாற்று சான்றுகளும் மரணம் என்பது தவிர்க்க முடியாத முடிவு என்று நிலையாமையை உறுதி படுத்துகிறது. இன்னும் ஒருபடி மேலே சென்று உயிர் நிலையாமை என்பது மட்டுமல்ல. உலகில் உள்ள எந்த பொருளுமே நிலையானது அல்ல தோன்றுவது அத்தனையும் அழிந்தே தீரும் மிக கடினமான மலை கூட சிதைந்து சிதைந்து சிறு மணல் துகள்களாக மாறிவிடும் போது, மனித உடலும், உயிரும் எம்மாத்திரம் என்று நிலையாமையை பற்றி மரணத்தை பற்றி ஆதாரம் தந்து சாவு பற்றிய நமது பயத்தை அதிகரித்து விடுகிறார்கள்.

இறைவனால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களும், மகிழ்ச்சியை நாடுகிறது மனிதனை பற்றி மிக குறிப்பாக சொன்னால், அவன் இன்பத்திற்காக இன்பத்தை அனுபவிப்பதற்காக பெரிய போராட்டமே நடத்துகிறான். கனி ரசமாக மதுவை அருந்தி களித்திருப்பது இன்பம் என்று ஒருவன் கூறுகிறான். கன்னியரின் மடிதனில் கிடப்பது இன்பம் என்று வேறொருவன் சொல்லுகிறான். மழலையரின் வாயமுதம் தருவது இன்பம் என்று மற்றவன் கூறுகிறான். மாடி மனை கோடி பணம் பெறுவது இன்பம் என்று இன்னொருவன் தேடி ஓடுகிறான். இப்படி எது இன்பம் என்பதில் ஆயிரம் சர்ச்சைகள் இருக்கலாமே தவிர, இன்பத்தை நாடுவதிலும், தேடுவதிலும் வாழ்வின் இறுதி நோக்கம் இன்பம் தான் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது.

இன்பம் தேடுதல் மட்டும் இல்லை என்றால், சமுதாய இயக்கம் என்பதே இருந்திருக்க வாய்ப்பில்லை. அதிகமான இன்பமும், மிக குறைவான துன்பமும், வாழ்க்கையை உன்னதமாக மாற்றுகிறது. மனிதன் இன்பம் தருவது அனைத்தையும் நல்லது என்கிறான். அதை நோக்கி நடப்பது தான் நல்வழி என்கிறான். துன்பம் தருகின்ற பாதையில் நடந்து சென்றால், அவனை கேலியும் கிண்டலும் செய்து பயணத்தை தொடர விடாமல் தடுத்தும் விடுகிறான். இந்த உலகில் உள்ள பொருட்கள் அனைத்துமே இன்பமானது, இதை விட்டு விட்டால் இன்பம் என்பது கிடைப்பது அரிது என்று பல மனிதர்கள் நினைக்கிறார்கள். ஆனால், சிலர் இன்பம் என்பது மனம் சார்ந்த உணர்ச்சி, ஒருவருக்கு இன்பமாக இருப்பது வேறொருவருக்கு துன்பமாக இருக்கும். உலகத்தில் கண்ணுக்கு தெரியும் பொருட்களை வைத்து இன்பத்தை தேடினால், அது இன்ப துன்பம் என்று கலப்படமாக இருக்குமே தவிர முற்றிலுமான இன்பமாக இராது என்கிறார்கள்.

இப்படி முற்றிலும் இன்பமயமாக இருப்பது உலக பொருட்களுக்கு அப்பாற்பட்ட முக்தி நிலை. இந்த இன்பத்தை பெறுவதற்கு எந்த பொருட்களும் தேவையில்லை. அழிந்து போகின்ற பொருட்களை வைத்து கொண்டு அழியாத இன்பத்தை பெற்றுவிட முடியாது. எனவே, அழியாத இன்பம் தருகின்ற முக்தி என்ற இறுதி நிலையை அடைவதற்கு உலக பொருட்களை நாடாமல், உள்ளுக்குள் விளைந்து கிடக்கும் கருத்து பொருட்களை எரித்து சாம்பலாக்கி விட்டு முக்தியை நோக்கி நடைபோடுவது தான் துன்பம் கலவாத இன்பத்தை பெற ஒரே வழி என்று கருதப்படுகிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434







# நன்றியுணர்வு

‘இறைவனின் படைப்பில் நாம் ஒரு தானியத்தை நட்டால் ஆயிரக்கணக்கான தானியங்களாக விளைகின்றன. உலகத்தில் எந்த ஒரு வங்கியாவது இது போன்ற வட்டியைத் தர முடியுமா? அப்படி என்றால் இந்த அளவிற்கு பல மடங்கு வாரி வழங்கும் இறைவனை சிறிதளவாவது நினைக்க வேண்டாமா! தினையளவாவது நன்றி பாராட்ட வேண்டாமா!

## நன்றியுணர்வுடன் இருப்பதால் ஏற்படும் லாபம்

1. தெய்வத்தின் மீதுள்ள ச்ரத்தை அதிகரிக்கிறது.
2. மனதிற்கு விரோதமாக நடக்கும் நிகழ்வுகளிலும் மனதின் ஸ்திரத்தன்மை அதிகரிக்கிறது.
3. ஸாதகர்களிடம் ஏற்படும் எதிர்மறை எண்ணங்கள் குறைந்து மற்றவர் பற்றிய தவறான எண்ணப்பதிவுகளும் குறைகிறது; கற்கும் மனப்பான்மை உண்டாகி மேலே செல்ல முடிகிறது.
4. ஆன்மீக கஷ்டம், ப்ராரப்தம் (விதி), ஆளுமை குறைகள் மற்றும் அஹம்பாவம் ஆகியவற்றால் உண்டாகும் நிலையை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உண்டாகிறது; அத் துடன் அஹத்தை எதிர்த்து போராடும் சக்தி கிடைக்கிறது.
5. நன்றியுணர்வுடன் இருப்பதால் ஸாதனை, தொடர் முயற்சியாக தொடர்கிறது மற்றும் விடாமுயற்சி அதிகரித்து அதற்கு துரித கதி கிடைக்கிறது.
6. தெய்வம் அள்ளித் தரும் ஒவ்வொரு க்ஷணத்திலும் ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது.
7. ரஜதம இருந்தாலும் நாளுக்கு நாள் அதிகரிக்கும் சைதன்யத்தை க்ரஹிக்க முடிகிறது.

– குமாரி பூஜா ஜாகவ். ஜல்காவ்.




கற்பனை மற்றும் சித்திரம்: திருமதி உமா ரவிசந்திரன், சென்னை

## ஸாதகர்களின் ஒவ்வொரு அசைவிலும் நன்றி கலந்திருப்பதே நன்றியுணர்வு ஆகும்!

தானே மதுரமயமாக விளங்கும் பராத்பர குரு டாக்டர் ஆடவலே அவர்கள் ஸாதகர்களுக்கும் அகில சிருஷ்டியை மதுர நோக்குடன் பார்க்கும் சக்தியை ஈந்துள்ளார். இன்று ஸாதகர்கள் ஸாதனையில் உள்ள மாதுர்யத்தை அனுபவிக்கின்றனர். அதற்காக அவரின் சரணங்களில் கோடி கோடி நன்றி!

## நன்றியுணர்வு எவ்வாறு நிர்மாணமாகிறது?

அ. ‘ஞானம் அடைய வேண்டும் என்ற தாபம் அதிகரிக்கும்போது ஜீவனின் ஆர்வம் ச்ரத்தையாக உருமாறுகிறது. அதாவது ஞானம் கிடைப்பது சம்பந்தமாக இறைவனிடம் நன்றியுணர்ச்சி மிகுகிறது.

ஆ. காரியத்தில் எப்பொழுதும் ஆன்மீக உணர்வு நிலையாக இருக்கும்போது அது வெளிப்படாத ஆன்மீக உணர்வாக உருமாறி நன்றியுணர்வாக பரிணமிக்கிறது.’

நன்றியுணர்வைக் கொள்வதால் ஸாதகர்களின் அஹம்பாவம் அதிகரிப்பதில்லை, இறுதியில் அஹம் அழிந்த நிலை (மோக்ஷபிராப்தி) ஏற்படுவது சுலபமாகிறது

‘நன்றியுணர்வைக் கொள்வதால் எக்காரணத்தாலும் ஸாதகர்களின் அஹம்பாவம் அதிகரிப்பதில்லை. நன்றியுணர்வு கொள்ளும்போது ஸாதகர் ஸம்பூர்ண புகழையும் குரு அல்லது இறைவனுக்கு அர்ப்பணிப்பதால் ஸாதகரிடத்தில் தான் கர்த்தா என்ற உணர்வு ஏற்படுவது இல்லை. தானே கர்த்தா என்ற உணர்வு எவ்வளவு குறைவாக உள்ளதோ அவ்வளவு அஹம்பாவம் குறைவது சுலபமாகிறது.

அதனால் ஒவ்வொருவரும் எவ்வளவு ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட்டாலும் குருவிடம் உள்ள நன்றியுணர்வு குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதன் மூலம் ஸாதகர்களின் அஹம்பாவம் குறைந்து அத்துடன் அஹம்பாவம் முற்றிலும் அகன்ற நிலையை எட்டுவது சுலபமாகிறது. அஹம் அகன்ற நிலையை எட்டுவது என்பது ‘மோக்ஷபிராப்தி’ அடைவது ஆகும். இதனால்தான் பல மகான்கள் தங்களின் பாடல்களில், அபங்குகளில் மற்றும் காவியங்களில் தங்களின் குருவைப் போற்றி அடி பணிகின்றனர். அதன் மூலம் இப்பாடல்களைப் பயிலும்போது அந்த மகான்களைக் காட்டிலும் அவர்களின் குருமார்கள் மீது அதிக மதிப்பு ஏற்படுகிறது மற்றும் அவர்களிடம் நன்றியுணர்வு ஏற்படுகிறது.’

ஒரு பொருளை உபயோகிக்கும் நபருக்கு அப்பொருளிடம் உள்ள நன்றியுணர்வு எவ்வளவு அதிகமாக உள்ளதோ அந்த அளவிற்கு பொருளிடமுள்ள சைதன்யம் கூடும்

‘ஒரு பொருளை உபயோகிக்கும் நபருக்கு அப்பொருளிடம் உள்ள நன்றியுணர்வு எவ்வளவு அதிகமாக உள்ளதோ அந்த அளவு அப்பொருள் சைதன்யம் மிகுந்ததாக மாறி ஸ்ரீகிருஷ்ண தத்துவத்துடன் ஒன்றிணைகிறது மற்றும் ஸாதக நிலையைப் பெறுகிறது.’

## நன்றி என்றால் என்ன?

அ. ‘நீங்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்கிறீர்கள் மற்றும் அவர் உதவி செய்தால் அவரிடம் நன்றி தெரிவிக்கிறீர்கள். இங்கு நீங்கள் செய்யும் ‘க்ருதி’யையும் இறைவனே செய்விக்கிறார் என்ற ஞானமே ‘க்ருதக்ஞ’ அதாவது ‘நன்றி’ ஆகும். அதாவது நன்றி என்பது காரியம் செய்பவர் யார் என்ற உண்மையை உணர்ந்திருப்பது ஆகும். ‘க்ருத்’ என்றால் ஸத்யம், அதாவது இறைவனாலும் தான் செய்த பிரார்த்தனையாலும் தங்களின் மனோரதம் ஈடேறியது என்ற ஞானத்தைப் பெறுவதே ‘க்ருதக்ஞ’ அதாவது ‘நன்றி’ ஆகும்!’

ஆ. ‘ச்ரத்தை என்பது நன்றியுணர்வு ஆகும். அத்துடன் வெளிப்படாத ஆன்மீக உணர்வின் பரிணாமம் என்பதும் நன்றியுணர்வு ஆகும்.’

நன்றியுணர்வுடன் இருக்கும்போது மனச்சோர்வு ஏற்படாது ஆனந்த நிலையில் இருப்பதால் ஸாதனையை மேலும் சிறப்பாக செய்ய முடிகிறது!

ஆனால் பெரும்பான்மை ஸாதகர்கள் ஆளுமை குறைகளை நாள் முழுவதும் நினைத்து துக்கப்படுகின்றனர். சில ஸாதகர்கள் மற்றவரின் குணங்கள் மற்றும் முன்னேற்றத்துடன் ஒப்பீடு செய்து ‘நான் பின்தங்கி உள்ளேன்’ என்று துக்கப்படுகின்றனர். அவர்களுக்கு ஒன்று தெரிவதில்லை, அதாவது மாதம் பத்தாயிரம், ஐம்பதாயிரம் மற்றும் ஒரு லக்ஷம் சம்பளம் வாங்குபவர் தங்களைக் காட்டிலும் அதிக சம்பளம் வாங்குபவருடன் ஒப்பீடு செய்ய ஆரம்பித்தால் அவர்கள் துக்கத்திலேயே ஆழ்ந்திருப்பர். அதற்குப் பதிலாக பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குபவர் ‘வேலை இல்லாமல் திண்டாடுபவரைக் காட்டிலும் நான் மேல்’ என்றும், ஐம்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குபவர், ‘மாதம் பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குபவரைக் காட்டிலும் நான் மேல்’ என்றும், ஒரு லக்ஷம்

ரூபாய் சம்பளம் வாங்குபவர், 'ஐம்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குபவரைக் காட்டிலும் நான் மேல்' என்றும் சிந்தனை செய்தால் அவர்களுக்கு துக்கம் ஏற்படாது ஆனந்தமே ஏற்படும்.

ஸாதகர்களின் கவனத்திற்கு இவை வருவதில் லை, அதாவது கிடைத்தற்கரிய மனிதப் பிறவியை இறைவன் அளித்துள்ளான், அதிலும் ஸாதனையின் மீது ஈடுபாடு கொள்ள வைத்துள்ளான், ஸாதனைக் கான வழிகாட்டு தலையும் அளித்துள்ளான், ஸாதனை செய்து முன்னேற்றம் அடைய வைத்துள்ளான்.

இதை நினைவில் இருத்தும்போது 'பூமியிலுள்ள பெரும்பான்மை மனிதர்களுடன் ஒப்பிடும்போது நாம் எவ்வளவு பாக்கியம் செய்துள்ளோம்', என்பது கவனத்திற்கு வந்து மனதில் இறைவன் மீது நன்றி யுணர்வு மிகும். சுய ஆலோசனை தரும் நேரத்தில் குறைகளை கவனத்திற்கு கொண்டு வந்து அவற்றை நீக்க சுய ஆலோசனை வழங்குவதே சரியான வழிமுறை. அத்துடன் நாள் முழுவதும் ஆன்மீக உணர்வு பூர்வமாக நாமஜபம் செய்து நன்றியுணர்வுடன் இருங்கள். 'பக்தியுள்ள இடத்தில் பகவான்' என்பதால் அச்சமயம் மனதில் ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது.

என்னுடைய உதாரணத்தின் மூலம் நன்றி யுணர்வுடன் இருப்பதால் 'சேவை எவ்வாறு செய்ய முடிகிறது மற்றும் மனதிற்கு எவ்வாறு ஆனந்தம் கிடைக்கிறது' என்பது புரிய வரும். முன்பு நான் எல்லா இடங்களிலும் ஸத்சங்கம், பயிற்சி வகுப்புகள், பெரும் சபாக்கள் ஆகியவற்றில் பங்கு கொள்ள செல்வேன்.

இன்று என்னால் எங்கும் வெளியே செல்ல முடிவதில்லை என்றா லும் இன்று வரை இறைவன் நடத்துவித்த காரியங்கள் அனைத்தையும் நினைக்கும்போது என்னால் நன்றியுணர்வுடன் ஆனந்தமாக இருக்க முடிகிறது. அறையிலேயே உட்கார்ந்து இரவு பகல் முழுவதும் நூல் எழுதும் சேவையை ஆனந்தமாக செய்ய முடிகிறது'.

(பராத்பர குரு) டாக்டர் ஆடவலே
மேலும் விவரங்களுக்கு:
hindujagruti
தொ.எண்: 9380949626

# தீராத வியாதியை தீர்க்கும் சர்ப்ப பிரதிஷ்டை



இரண்டு பாம்புகள் (சர்ப்பங்கள்) ஒரு தடியை பிண்ணிக் கொண்டிருக்கும் உருவம் பொறிக்கப்பட்ட குறியீட்டை மருத்துவ மனைகளிலும், மருத்துவர்களின் வாகனம் மற்றும் அவர்களின் அறிமுக அட்டைகளிலும் காணலாம்.

அந்த குறியீடு மருத்துவ துறையின் குறியீடாக உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அது போன்ற குறியீடு சிவன் கோயில் மற்றும் அம்மன் கோயில் வளாகங் களிலும், அரச மரங்களின் அடியிலும் கற்சிலைகளாக நிறுவப்பட்டிருப்பதை காணலாம். ஆலயங்களில் நிறுவப்பட்டிருக்கும் இத்தகைய சர்ப்ப பிரதிஷ்டைகளை தினமும் ஒரு முறை தரிசித்து வந்தால் அன்றைய தினம் நாம் செய்த கர்மங்கள் அனைத்தும் நம்மை விட்டு நீங்கிவிடும். இந்த கற்சிலைகளைப் பார்த்துதான் மருத்துவத்துறை தங்கள் குறியீட்டை அமைத்துக்கொண்டுள்ளது.



இந்த சர்ப்ப பிரதிஷ்டைகளை தினமும் தரிசித்து வந்தால் தீராத வியாதிகள் எல்லாம் தீரும் என்பது பலருக்கும் தெரியாத ரகசியம்.

நம் முன்னோர்கள் தினமும் இந்த சர்ப்ப பிரதிஷ்டைகளை (இரண்டு பாம்புகள் பிண்ணிக்கொண்டிருப்பது போன்ற கற்சிலைகள்) கோயில்களில் தரிசித்து வந்தார்கள். இதனால் நல்ல ஆரோக்கியமான சூழ்நிலையில் அவர்கள் இருந்தார்கள்.

www.aanmeegamalar.com







# மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம்

❐ வாழ்க்கை இன்னதென்று அறியாமல், குறிக்கோள் ஏதும் இல்லாமல் மிருகங்கள் வாழ்கின்றன. மனிதனும் அப்படி விலங்கு வாழ்க்கை வாழ்வது அர்த்தமில்லை.

❐ அடுத்தவர்களின் குறைகளைக் களைவதில்தான் நம் கவனம் அனைத்தும் செல்கிறது. நம் குறை களை முதலில் களைய முற்படுவதே பயனுடைய தாகும். நம்மீது குற்றம் என்பதே இல்லை என்ற உயரிய நிலையை எட்டுவதே நம் கடமையாகும்.

❐ பெற்றோரை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் நீங்கள் தாய் தந்தையர் ஆகும்போது, உங்களை உங்கள் பிள்ளைகள் மதிப்புடன் நடத்துவார்கள்.

❐ மண்ணில் பிறக்கும் உயிர்களில் மனிதப்பிறவி தனிச்சிறப்புடையது. கடவுளின் கரங்களில் இருந்து இவ்வரிய கொடையாகிய மனிதப்பிறவி என்னும் வெகுமதியை பெற்ற நாம், அதன் அருமையை உணராமல் வாழ்ந்தால், பெரும் பாவம் செய்தவர்களாகி விடுவோம்.

❐ மனதை அலைபாய விடாமல் தடுப்பது யோகம். அவ்வாறில்லாமல் அலைபாய விட்டால் உண்டாகும் ரோகம். இன்றைய மனிதன் புலனடக்கம் இல்லாததால் உலக சுகங்களில் மூழ்கி தன்னையே இழந்து கொண்டிருக்கிறான்.

❐ சிலர் காலை மடக்கி உட்காருதல், ஒற்றைக் காலில் நிற்றல் இதைத்தான் யோகாசனம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையான யோகம் என்பது உயர்ந்த அன்புணர்வோடு இறைவனோடு நம்மை இணைத்துக் கொள்வதாகும்.

❐ அன்பால் இதயத்தை நிறைத்திருக்கும் மனித னையே இறைவன் விரும்புகிறார். உண்மையோடும், பக்தியோடும் இருக்கும் மனிதர்களை இறைவனே தேடிவந்து விடுவார். அவர்களின் தேவைகளை நிறைவேற்றி அருள்வார்.

❐ தாய் தன் குழந்தைகளின் தேவைகளை கேட் காமலே, வலிந்து செய்வது போல நாமும் பக்தியில் இறைவனின் குழந்தைகளாக மாறுவோம்.

❐ தனித்து வாழாதீர்கள். ஒதுங்கி போகாதீர்கள். மனம் விட்டு பேசுங்கள். ஒற்றுமை உணர்வுடன் எல் லோருடனும் உறவாடுங்கள். பரஸ்பர அன்பினால் நம் வாழ்வு ஒளியுடையதாகும் என்ற உண்மையை உணருங்கள்.

www.aanmeegamalar.com



# கண் திறந்த பிள்ளையார்



பல வருடங்களுக்கு முன் காஞ்சி மகா பெரியவர் தமிழகத்தின் தென்பகுதிகளில் யாத்திரை மேற்கொண்டிருந்த சந்தர்ப்பம்.....

தஞ்சாவூர் ,திருச்சி, திருவானைக்காவல், ஸ்ரீரங்கம், திண்டுக்கல், சோழவந்தான் ஆகிய ஊர்களுக்கு விஜயம் செய்துவிட்டு,மதுரையை நோக்கித் தன் பரிவாரங்களுடன் வந்து கொண்டிருந்தார்.

ஸ்வாமிகள் வழி நெடுகிலும் உள்ள கிராம மக்கள் தங்கள் குழந்தை குட்டிகளுடன் திரளாக வந்து ஸ்வாமிகளை தரிசித்து ஆசி பெற்றுச் சென்றனர். அவர்களுக்கெல்லாம் இன்முகத்தோடு அருளாசி வழங்கினார்.

பழம்,கல்கண்டு ஆகியவற்றைப் பிரசாதமாக கொடுத்துக்கொண்டே நடந்தார் ஸ்வாமிகள்.

மதுரை மாநகரை நெருங்கும் நேரம். அங்கிருந்த ஒரு கிராமத்து ஜனங்கள் அனைவரும் ஒன்றுகூடி “பூர்ணகும்ப” மரியாதையுடன் ஸ்வாமிகளை வரவேற்றார்கள்.அந்த ஜனங்களின் பக்தியையும் ஆர்வத்தையும் பார்த்த ஸ்வாமிகளுக்கு ஏக சந்தோஷம்.

சாலையோரம் இருந்த ஓர் அரசுமரத்துவேரில் வந்து அவராகவே அமர்ந்துகொண்டார். அனைவரும் கீழே விழுந்து நமஸ்கரித்தனர்.

அந்த ஊர்ப் பஞ்சாயத்துத் தலைவர் மிகுந்த பக்தியுடன் ஸ்வாமிகளை நமஸ்கரித்தார் . பிறகு, “பெரியவங்ககிட்ட ஒண்ணு பிரார்த்திக்கிறோம். நாங்க ஏழை சனங்கல்லாம் ஒண்ணா சேந்து, பக்கத்துல ஒரு புள்ளயார் கோயிலை புதுசா கட்டி முடிச்சிருக்கோம்.

சாமி பாதம் அங்க படணும்னு வேண்டிக்கிறோம்....கருண பண்ணணும்!”

என்று கன்னத்தில் போட்டுக்கொண்டார்.

குதூகலத்தோடு எழுந்த ஆச்சார்யாள், “கோயில் எங்கே இருக்கு?” என வினவினார்.

பஞ்சாயத்துத் தலைவர், “இதோ கூப்பிடு தூரத்திலதான் சாமி இருக்கு. வந்து அருள் பண்ணணும்!” என்றார்.

ஸ்வாமிகள் மிக வேகமாக பிள்ளையார் கோயிலை நோக்கி நடந்தார். மேளதாள பூரணகும்ப மரியாதையுடன் ஆச்சார்யாள் கோயிலுக்குள் பிரவேசித்தார். கர்ப்பக்கிருகத்துள் ஆறடி உயர சிலா ரூபமாக விநாயகர் வீற்றிருந்தார். விக்கிரகம் கம்பீரமாக பளிச்சென்று இருந்தது. வைத்த கண் வாங்காமல் சற்று நேரம் விநாயகரையே பார்த்த பெரியவா, பஞ்சாயத்துத் தலைவரிடம், “கோயிலுக்கு கும்பாபிஷேகம் ஆயிடுத்தோ?” என்று கேட்டார்.

“இன்னும் ஆகலீங்க சாமி” என்றார் தலைவர்.

“அதான் எல்லாமே பூர்த்தியாகி இருக்கே...ஏன் இன்னும் கும்பாபிஷேகம் நடத்தலே?” என்று கேட்டார் ஸ்வாமிகள்.

பஞ்சாயத்துத் தலைவர் பவ்வியமாக பதில் சொன்னார்.; “எல்லாமே பூர்த்தி ஆயிடுச்சு சாமி. இன்னும் ஒரு மாசத்துக்குள்ளாற மகாத்மா காந்தி இந்த வழியா மதுரைக்கு வாராறாம். அவுரு வர்றன்னிக்கு, ‘அவருக்கு முன்னால வெச்சே கும்பாபிஷேகத்த நடத்த ஏற்பாடு பண் ணித் தர்றோம்‘னு மதுரையைச் சேர்ந்த சில பெரிய மனுஷங்க உறுதி கொடுத்திருக்காங்க! அதனால தான் காந்தீஜீக்காகக் காத்துக்கிட்ருக்கோம்!”

ஆச்சார்யாள் தனக்குள் சிரித்துக்கொண்டார். இரண்டு நிமிஷம் கண்ணிமைக்காமல் விநாயகரையே பார்த்துவிட்டுச் சொன்னார்.

“அதுக்கு அவசியம் இருக்காது போலத் தோண்றதே! கணபதி கண்ணத் திறந்து நன்னா பாத்துண்ருக்காரே... இனிமே கும்பாபிஷேகத்த தாமசப்படுத்தப்படாது. ஒடனேயே நல்ல நாள் பார்த்து பண்ணிடுங்கோ.”

உடனே பஞ்சாயத்துத் தலைவர், “இல்லீங்க சாமி! கண் தொறக்கிற சடங்கு விநாயகருக்கு இன்னும் நடக்கலீங்க சாமி! நீங்க இப்படி சொல்றத பாத்தா ஒண்ணும் புரியலிங்களே..” என்று குழம்பினார்.

ஸ்வாமிகள் மீண்டும் சிரித்துக்கொண்டே, “இது நானா சொல்லலே! கணபதி கண்ணைத் திறந்து நன்னா “ஸ்பஷ்டமா” பார்த்துண்ருக்கார்.

சீக்கிரமே கும்பாபிஷேகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் பண்ணுங்கோ!

காந்தி வந்தா நன்னா தரிசனம் பண்ணிட்டுப் போகட்டுமே” என்று கூறினார் . குழுமியிருந்த ஜனங்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

அமைதியோடு காத்திருந்தனர்.

பஞ்சாயத்துத் தலைவருக்கும் குழப்பம் தீரவில்லை. உடனே ஆளனுப்பி விநாயகர் சிலையை வடிவமைத்த ஸ்தபதியை வரவழைத்தனர். அவரிடம் ஆச்சார்யாள் சொன்ன விஷயம் தெரிவிக்கப்பட்டது.

சிற்பியும் அடித்துச் சொன்னார்; “இல்லீங்க ஸ்வாமி. இன்னும் விநாயகருக்கு கண் தொறக்கலீங்க. தொறந்தா விக்கிரகத்தச் செதுக்கின நான்தானே தொறக்கணும். இன்னும் அது ஆவுலீங்க..”

மூன்று தடவை ஆச்சார்யாள் காலில் விழுந்து கை கட்டி நின்றார் சிற்பி.

மீண்டும் ஒருமுறை விக்கிரகத்தையே உற்று நோக்கிய ஸ்வாமிகள் “மகா கணபதிக்கு நன்னா கண் தெறந்தாச்சு! அவர் சந்தோஷமா பாத்துண்டிருக்கார். இனிமேலும் தாமதிக்கிறது நல்லதில்லே. சீக்கிரமா ஒரு நல்ல நாள் பாத்து கும்பாபிஷேகத்த நடத்துங்கோ. க்ஷேமம் உண்டாகும்“ என்று சொல்லிவிட்டு வேகவேக மாகப் புறப்பட்டுவிட்டார் ஆச்சார்யாள். பரிவாரம் பின்தொடர்ந்தது. ஆச்சார்யாளை அந்த ஊர் எல்லை வரை சென்று வழி அனுப்பி வைத்துவிட்டுத் திரும்பினர், அத்தனை பேரும்.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்த ஊர் கிராமப் பஞ்சாயத்து சபை’ கூடியது. ஆச்சார்யாள் கூறிவிட்டுப் போன விஷயம் குறித்து அலசி ஆராயப்பட்டது. விநாயகர் விக்கிரகத்தைச் செதுக்கிய சற்று வயதான ஸ்தபதி அடித்துச் சொன்னார்.

“ஆச்சார்ய ஸ்வாமிங்களுக்கு ஞான திருஷ்டில எல்லா விஷயங்களும் தெரிஞ்சுடும். இருந்தாலும் எங்கையால் நான் இன்னும் கண்ண தொறக்கலே. சாமி எப்டி சொல்றாங்கனு தெரியலே. நானும்கூட விக்கிரகத்துகிட்ட போயி உன்னிப்பா கவனிச்சுப் பாத்துட்டேன். அப்டி ஆனதா தெரியலீங்க.... இப்ப என்ன பண்றது?”

அங்கே மௌனம் நிலவியது. ஒருவரும் வாய் திறக்கவில்லை. திடீரென்று பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க உள்ளூர்ப் பையன் ஒருவன் அந்த இடத்துக்கு ஓடி வந்தான்.கை கட்டி நின்றான்.



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

www.aanmeegamalar.com



www.aanmeegamalar.com

அவனைப் பார்த்த தலைவர், “தம்பி! ஏன் இப்படி ஓடி வர்றே? என்ன விஷயம்?” என்று கேட்டார்.

உடனே அந்தப் பையன் “தலைவரே! கோயில் விநாயகர் சிலை பத்தி எனக்கு ஒரு விஷயம் தெரியும்..சொல்லலாங்களா?”என்று கேட்டான் பவ்யமாக.

“ஒனக்கு என்ன தெரியும்..சொல்லு தம்பி!” என்று மிக ஆர்வம் காட்டினார் தலைவர். கூட்டமும் அந்தப் பையனையே பார்த்துக் கொண்டிருந்தது.

பையன் பேச ஆரம்பித்தான்;

“ஐயா தலைவரே! எனக்கு தெரிஞ்ச உண்மையை சத்தியமா சொல்றேங்க. அந்த சாமியார் சாமி [ஆச்சார்யாள்] ‘புள்ளையாருக்கு கண் தொறந்தாச்சு’னு சொல்லிட்டுப் போனது மெய் தாங்க! எப்படீன்னா ஒரு பத்து நாளுக்கு முந்தி ஒரு நாள் உச்சி வெயில் நேரமுங்க. இதோ ஒக்காந்துருக்காரே. புள்ளையார் விக்கிரகத்தைச் செஞ்ச தாத்தா. இவரோட பேரப் பையன் என் சிநேகிதன். என்ன வேலை பண்ணான் தெரியுமா? இவங்க தாத்தா சிலைகளின் கண்ண தொறக்கறத்துக்கு வெச்சிருக்கிற சின்ன உளியையும், சுத்தியையும் எடுத்துக்கிட்டு, எங்களையும் கூட்டிக்கிட்டு கோயிலுக்குப் போனான்.

“இதோ பாருங்கடா!எங்க தாத்தா இப்புடித்தான் சிலைங்க கண்ணைத் தொறப்பாருன்”ன்னு சொல்லிகிட்டே,’புள்ளையாரே,கண்ணத்தொற... புள்ளையாரே, கண்ணத் தொற!’னு அவனும் சொல்லி, எங்களையும் ஒரக்க சொல்லச் சொல்லி, “டொக்கு..டொக்குனு” உளிய புள்ளயாரின் ரண்டு கண்ணுலயும் வச்சு தட்டினான்..”

“புள்ளையாருக்கு கண்தொறந்தாச்சு”னு எல்லாப் பசங்களும் குதிச்சு ஆடினோம்.

இந்த விஷயம் ஊர்ல ஒருத்தவங்களுக்கும் தெரியாது. நாங்களும் வெளியிலே மூச்சு வுடலே! இது தாங்க நடந்துச்சு... எங்களை மன்னிச்சுருங்க.”

பிரமிப்போடு அமர்ந்திருந்தது கூட்டம். பஞ்சாயத்துத் தலைவர் கண்களில் நீர் சுரந்தது. ஆச்சார்யாளின் மகிமையைப் பார்த்து அந்த ஊரே வியப்பில் ஆழ்ந்தது. சிற்பியின் பேரனுக்கு எட்டு வயதிருக்கும்.

பஞ்சாயத்து அந்தச் அழைத்து விசாரித்தது. விநாயகருக்கு, தான் கண்களைத் திறந்துவிட்டதை ஒப்புக் கொண்டான். எல்லோரும் கோயிலுக்கு ஓடிச் சென்று விநாயகரை விழுந்து வணங்கினர். சிற்பி, ஒரு பூதக் கண்ணாடியின் உதவியோடு கணபதியின் கண்களை நன்கு பரிசீலித்தார்.

மிக அழகாக “நேத்ரோன் மீலனம்“ [கண் திறப்பு] செய்யப்பட்டிருந்ததைப் பார்த்து ஆச்சர்யப்பட்டார்.

ஊரே திரண்டு ஆச்சார்யாள் சென்ற திசையை நோக்கி ஓடியது. அடுத்த கிராமத்தில் சாலை ஓரமிருந்த ஒரு பெரிய ஆலமர நிழலில் பரிவாரங்களுடன் இளைப்பாறிக்கொண்டு இருந்தார் ஸ்வாமிகள்.

அனைவரும் ஓடிப் போய் ஸ்வாமிகள் காலில் விழுந்து எழுந்தனர். அந்தப் பஞ்சாயத்துத் தலைவரும், சிற்பியும் கேவிக்கேவி அழ ஆரம்பித்துவிட்டனர்.

இவர்களைப் பார்த்த அந்த பரப்பிரம்மம் சிரித்துக்கொண்டே கேட்டது; “புள்ளையாருக்குக் கண் தெறந்தாச்சுங்கறத பிரத்தியட்சமா தெரிஞ்சுண்டுட்டேளோல்லியோ ?

போங்கோ....போய் சீக்கிரமாகும்பாபிஷேகத்த நடத்தி முடியுங்கோ. அந்த பிராந்தியத்துக்கே க்ஷேமம் உண்டாகும்.”

சிரித்தபடியே கை தூக்கி ஆசிர்வதித்தது அந்த நடமாடும் பரப்பிரம்மம்.

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்